Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, FEBRUARY 13, 2024

செவ்வாய்க்கிழமை பெப்ரவரி 13, 2024 | ஒளி: 09 கதிர் 192 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE



## தோல் நோய் அபாயம்

இந்த நாட்களில் மிகவும் வறண்ட காலநிலை காரணமாகத் தோல் நோய்களின் தாக்கம் அதிகமாகக் காணப்படுவதாக லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

குழந்தைகளைத் தினமும் இரண்டு வேளை குளிக்க அனுமதிக்க வேண்டும் என்றும், தோல் நோய் உள்ள குழந்தைகளைக் காலை, இரவு என 20 நிமிடங்கள் தண்ணீரில் குளிப்பாட்டினால் கட்டுப்படுத்தலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# அறிமுகமானது UPI முறைமை

இந்தியாவில் பயன்பாட்டிலுள்ள ஒருசீர் கொடுப்பனவு இடைப்பரப்பு (*Unified Payment Interface*) (*UPI*) எனும் டிஜிட்டல் கொடுப்பனவு முறைமையை இலங்கையிலும் திங்கட்கிழமை (12) அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

மொரிஷியஸிலும், இலங்கையிலும் இந்த கொடுப்பனவு முறை அறிமுகம் செய்யும் நிகழ்வு இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வீடியோ மாநாடு ஊடான பங்கேற்புடன் நடைபெற்றது.

இதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் மொரிஷியஸ் பிரதமர் பிரவிந்த் ஜுக்நவுத் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

தொடர்ச்சி P2





## 20 அன்று சலுகை அறிவிப்பு

மின்சாரக் கட்டணச் சலுகை தொடர்பில் எதிர்வரும் 20ஆம் திகதி அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், "மின் கட்டணம் தொடர்பான பொது கலந்தாய்வு பெப்ரவரி 15ம் திகதியுடன் முடிவடைகிறது. மின் கட்டண திருத்தத்தில் அதிகபட்ச நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்யப்படும்" என்றும் தெரிவித்துள்ளார்.



## குதிரைகளை அனுப்பியவருக்கு புண்ணியத்தால் கிடைத்த பதவி

**மரிக்கார் தெரிவிப்பு: 2024க்கு பின்னரே நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க வேண்டும் என்கிறார்**

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டும், ரணில் விக்ரமசிங்கவும் மொட்டும் தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பதற்காக தேர்தலை ஒத்திவைத்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும் வேலைத்திட்டத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒத்துழைப்பை வழங்காது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



### பேச்சு நின்னு போச்சு

# இன்று மீண்டும் வேலை நிறுத்தம்

நிதியமைச்சின் அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததை அடுத்து, சுகாதாரத்துறையில் உள்ள தொழிற்சங்கங்கள் மீண்டும் நாடு தழுவிய வேலை நிறுத்தத்தை அறிவித்துள்ளன. அதன்படி இன்று (13) காலை 6.30 மணி முதல் வேலைநிறுத்தம் நடைபெற உள்ளது என சுகாதார வல்லுநர்கள் கூட்டமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

இடையூறு, கிடைக்கும் தன்மை மற்றும் போக்குவரத்து (DAT) கொடுப்பனவு தொடர்பில் ஏற்பட்டுள்ள சர்ச்சையை அடுத்தே, சுகாதார தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இந்த கோரிக்கை முன்வைத்து, கடந்த மாதமும் சுகாதார தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்த போராட்டத்தில் குதித்திருந்தன. இதனால், நோயாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொழிற்சங்க பிரதிநிதிகள் நிதியமைச்சின் அதிகாரிகளுடன் முக்கிய கலந்துரையாடலை நடத்திய போதிலும் இரு தரப்பும் இணக்கப்பாட்டுக்கு வரவில்லை. இதனையடுத்தே சுகாதார தொழிற்சங்கங்கள் மேற்கண்ட அறிவிப்பை விடுத்துள்ளன.



**மேபீல்ட் மாணவி துஷ்பிரயோகம்;**

## இருவர் கைது: மக்கள் ஆர்ப்பாட்டம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ, செ.தி.பெருமாள்

திம்புல- பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேபீல்ட் தோட்டத்தைச் சேர்ந்த 13 வயதுடைய மாணவி ஒருவரை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் கீழ், அதே தோட்டத்தைச் சேர்ந்த 60 மற்றும் 40 வயதுடைய இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

துஷ்பிரயோகத்து உள்ளான மாணவி, பத்தனை பொலிஸாரால், சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக டிக்கோயா- கிளங்கன் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் .

தொடர்ச்சி P2



கலாநிதி ஏ.எம்.ஏ அஸீஸ்

## சனியன்று நினைவு பேருரை

அமரர் டாக்டர் ஏ. எம். ஏ அஸீஸ் நினைவஞ்சலிக்கூட்டம் மற்றும் நினைவுச் சொற்பொழிவு என்பன கொழும்பு- 10 ஒராபி பாஷா மாவத்தை, இல 406 இல் அமைந்துள்ள சாஹிரா கல்லூரியின் கஃபூர் மண்டபத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.45க்கு நடைபெறவுள்ளது.

இலங்கை முஸ்லிம், தமிழ்த் தலைவர், செனட்டர் அஸீஸின் உரைகளில் 'சட்டமும் அதன் நிகழ்கால முக்கியத்துவமும்' என்ற தலைப்பில் சிங்கபூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை ஓய்வுநிலைப் பேராசிரியர் எம். சொர்ணராஜா உரை நிகழ்த்தவுள்ளார். சர்வதேச திட்ட ஆலோசகர் கேப்டன் ஏ.ஜிஏ.பாரி மற்றும் கொழும்பு டைம்ஸ் ஆசிரியர் எம். சி ரசூல்தீன் இந்தக் கூட்டத்தில் உரையாற்றவுள்ளனர்.

கலாநிதி ஏ. எம். ஏ அஸீஸ் அறக்கட்டளையின் தலைவர் காலித் எம்.ஃபாரூக் மற்றும் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ மாநாட்டின் தேசிய தலைவர் இஹ்சான் ஏ.ஹமீட், ஆகியோர் நிகழ்வுக்கு இணைத் தலைமை தாங்குவர்.

தொடர்ச்சி P2

## சிறுநீர் கழித்த பொலிஸ் மீது பொலிஸார் தாக்குதல்

மரமொன்றில் சிறுநீர் கழிக்கச் சென்ற பொலிஸ் பரிசோதகரை கடுமையாக தாக்கியதாக பொலிஸ் பரிசோதகர் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளதாக பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பம்பலப்பிட்டி பொலிஸ் பரிசோதகர் சிற்றுண்டிச்சாலையின் பிரதான வாயிலுக்கு அருகில் உள்ள மரமொன்றின் அடியிலேயே சிறுநீர் கழிக்கச் சென்றுள்ளார்

சுமார் 6 பேர் கொண்ட பொலிஸ் குழு தம்மை சுற்றி வளைத்து கடுமையாக தாக்கியதாகவும் அவர்களில் மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவரும் அடங்குவதாக பொலிஸ் பரிசோதகரின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### தமிழக சினிமா கலைஞர்களை அழைத்து

## இசை நிகழ்ச்சிகளை நடத்தாமல் விடலாம்

**தமிழக சினிமா ஒரு பிரமாண்டமான பணம் கொழிக்கும் வியாபாரம். அங்கே யாரும் கலை சேவை செய்யவில்லை**



யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழக சினிமா கலைஞர்களின் கலை நிகழ்வில் நடந்த துரதிர்ஷ்ட சம்பவங்கள், இலங்கை- தமிழக கலாசசார உறவுகளுக்கு பாதகமாக அமைந்து விடக்கூடாது. இப்படியான பிரமாண்டமான கலை நிகழ்வுகள் நடத்தப்படும் போது, அவற்றுக்கான விதிமுறைகள் நடைமுறைக்கு வர வேண்டும் என்று என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

## இரகசிய கலந்துரையாடல் முடிவின்றி நிறைவு

**இருவருக்கும் இரண்டு நாள்கள் அவகாசம்**

■ க.அகரன்

தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவு தொடர்பில் சர்ச்சைகள் ஏற்பட்டிருந்த நிலையில் அது தொடர்பில் தீர்மானம் எட்டுவதற்காக வவுனியாவில் இடம்பெற்ற இரகசிய கலந்துரையாடல் முடிவின்றி நிறைவடைந்துள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி சர்ச்சைக்குத் தீர்வு காணும் முகமாக தற்போதைய பதில் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கம் தலைமையில் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை (11) கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரும், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.ஸ்ரீதரன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மற்றும் செயலாளர் பதவிக்குப் போட்டியிட்ட இரு அணிகளையும் சேர்ந்த ச.குகதாசன், ஞா.சிறிநேசன், கோடீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி P2



## "தனித்துவமான வாய்ப்பு உருவாகியுள்ளது"

எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கும் அரசியல் கட்சியான ஜே.வி.பியும் நல்ல பங்களிப்பை வழங்கிய ஒரே பெரிய உட்கட்டமைப்புத் திட்டம் உமா ஓயாவாகும் என தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷ, திட்டமும் புதிய அரசியல் கலாசாரமும் அந்த திட்டத்துடன் தொடங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

## அமெரிக்க பறந்தார் மைத்திரி

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியா ஊடாக அமெரிக்கா சென்றதை கட்டுநாயக்க விமான நிலையத்தின் பொறுப்பதிகாரி உறுதிப்படுத்தியுள்ளார்.

அவர், திங்கட்கிழமை (12) அதிகாலை 02.50 மணிக்கு இந்தியன் ஏர்லைன்ஸின் ஏஐ-284 விமானத்தில் இந்தியாவின் புதுடெல்லிக்குச் சென்று, அங்கிருந்து மற்றொரு விமானத்தில் அமெரிக்காவின் நியூயோர்க்கிற்குச் செல்கிறார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# அறிமுகமானது UPI முறைமை

அதனூடாக பணப் புழக்கமில்லாத பொருளாதார கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டில் வரி செலுத்தாமல் இருப்பதற்குக் காணப்படும் இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கு இவ்வாறான முறைமைகள் உதவியாக அமைந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த UPI முறைமையினூடாக பொது மக்களுக்கு தமது ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகளை மெய்நிகர் (virtual) டெபிட் அட்டையாகப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.

பொது மக்களுக்கு இம்முறையைப் பயன்படுத்துவதனூடாக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்காகப் பணத்தை அல்லது அட்டைகளைப் பயன்படுத்த வேண்டியிருக்காது. தமது ஸ்மார்ட் கையடக்க தொலைபேசியை டெபிட் அட்டையாகப் பயன்படுத்தி, பணத்தை அனுப்பவும், பெற்றுக் கொள்ளவும் முடியும்.

ஒரு ஸ்மார்ட் தொலைபேசி app இல் ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிக் கணக்குகளை இணைக்கும் வசதியை பாவனையாளருக்கு UPI வழங்கும். கணக்கு இலக்கங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான தேவையின்றி, பணப் பரிமாற்றத்தை மேற்கொள்ளவும் வசதியளிக்கும்.

இலங்கைக்கும் மொரிஷியசுக்கும் விஜயம் செய்யும் இந்தியர்களுக்கு UPI கொடுப்பனவு முறையைப் பயன்படுத்தும் வசதி இதனூடாக ஏற்படுத்தப்படும்.

வருமானவரித் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் குறிப்பிடுகையில், இந்த முறையினூடாக, நபர் ஒருவர் பணத்தைப் பெற்றுக் கொள்கையில் அல்லது பல மூலங்களிலிருந்து பல்வேறு வங்கிக் கணக்குகளுக்கு வருமானத்தைப் பெறுகையில் வரி அறவிடுவதற்கு உதவியாக அமைந்திருக்கும் எனத் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு வரும் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு டிஜிட்டல் முறையில் UPI மூலம் QR குறியீட்டைப் பயன்படுத்தி பணம் செலுத்தும் முறை ஒன்லைன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது.

NPCI International Payments Limited மற்றும் இலங்கையில் LankaPay Pvt Ltd நிறுவனங்கள் இணைந்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளன. இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்தருணத்தில் 10,000 வணிக நிறுவனங்கள் தம்மை இந்த முறையில் பதிவு செய்துள்ளன.

மேலும், இந்தியச் சுற்றுலாப் பயணிகளின் தடையற்ற கொடுப்பனவு வசதிகளுக்காக 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்த எண்ணிக்கையை 65,000 வரை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமது இந்திய விஜயத்தின் “தொலைநோக்கு அறிக்கையின் பிரகாரம், இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தி அறிமுகம் செய்யப்பட்டுள்ள UPI பணப் பரிமாற்ற முறை, சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் இதன்மூலம் தமிழ்நாடு, மும்பை ஆகியவற்றுடன் இலங்கை தொடர்புகளை ஏற்படுத்தும் எனவும் இதனால் 400,000 வர்த்தகர்கள் பயனடைவார்கள் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இந்திய வெளியுறவு அமைச்சருடனான பேச்சுவார்த்தை நம்பிக்கைக்குரிய முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுவதாகவும் மொரீஷியஸுடனான ஒத்துழைப்பு புதிய தொடர்புகளை மேம்படுத்தும் முயற்சியை மேலும் உறுதிசெய்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். UPI பணப்பரிமாற்ற முறையை ஒன்லைன் மூலம் அறிமுகம் செய்யும் நிகழ்வில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

# குதிரைகளை அனுப்பியவருக்கு புண்ணியத்தால் கிடைத்த பதவி

2010இல் நாட்டைக் காப்பாற்றிய தலைவரின் தரப்பும் 2015இல் நாட்டை அழித்தது நினைவிருக்கலாம். நாட்டின் வளங்களைக் கொள்ளையடித்து நாட்டை அராஜகமாக்கியது உங்களுக்கும் நினைவிருக்கலாம் என்றும் கூறினார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில், திங்கட்கிழமை (13) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2019இல், நாட்டைக் காப்பாற்ற ஒரு ஹீரோவாக கொண்டு வரப்பட்டார். அந்த மனிதன் நாட்டையே வங்குரோத்தாக்கி விட்டு பதவியை விட்டும் சென்று விட்டான். நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வந்ததாக இன்னொருவர் கூறுகிறார். நாட்டின் பொருளாதாரத்தை அவர் கட்டியெழுப்பிய விதமே இதுதான்.

2022ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் அரசாங்கத்தின் செலவினம் 3411 பில்லியன் என மத்திய வங்கியின் நிதி அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. 2023 முதல் 11 மாதங்களில் அரசாங்கத்தின் செலவினம் 4792 பில்லியன். நாட்டின் செலவு 1381 பில்லியனால் அதிகரித்துள்ளது. நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வந்த தலைவர் இதைத்தான் செய்துள்ளார்.

ரணில் ஜனாதிபதி பதவியில் இருக்கும் போது நாட்டின் செலவுகள் அதிகரித்து வருகிறது. கடன் சுமையும் அதிகரித்து வருகிறது.

பொருளாதாரம் மற்றும் சமூகம் பற்றிய தொலைநோக்கு பார்வையும் சர்வதேச சமூகத்துடன் தொடர்பும் கொண்ட பல்வேறு துறைகளில் திறமையான ஒரு குழுவினரால் மட்டுமே நாட்டை கட்டியெழுப்ப முடியும். வலதுசாரிப் பொருளாதாரக் கட்டமைப்பிற்குள் இருந்துகொண்டு உலகத்துடன் கொடுக்கல் வாங்கல் மற்றும் தொடர்புகளைப் பேணக் கூடிய ஒரு குழுவாலேயே நாட்டை தற்போதைய நிலையிலிருந்து மீட்டெடுக்க முடியும். மக்கள் ஒரு திட்டத்தை விரும்புகிறார்கள். ஐக்கிய மக்கள் அந்தத் திட்டத்தைக் கொண்டிருக்கிறது என்பது மக்களுக்குத் தெரியும்.

அரசின் வருமானம் என்பது வரிகள் மட்டுமல்ல. நாட்டில் வரிச் சுமையை குறைக்க அரசின் வருவாயை அதிகரிக்க வேண்டும். அரசின் வருவாயை அதிகரிக்க அன்னிய நேரடி முதலீட்டைக் கொண்டு வர வேண்டும். அந்நிய நேரடி முதலீட்டைக் கொண்டு வர, மோசடி, ஊழல், வீண் விரயம் ஒழிக்கப்பட வேண்டும். முதலீட்டாளர்களுக்கு நட்புறவான சூழலை உருவாக்க வேண்டும். நாட்டின் ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும்.

தோற்போம் என்றபடியால் ஜனாதிபதி தேர்தலை நடத்தாதுள்ளார். ரணில் விக்ரமசிங்க இரண்டு முறை தோல்வியடைந்தார். 2010இல் ஜனாதிபதித் தேர்தலில் இன்னொரு குதிரை கொண்டுவரப்பட்டது. 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னொரு குதிரை கொண்டுவரப்பட்டது. ரணில் விக்ரமசிங்கவுக்கு இம்முறை ஜனாதிபதி பதவி புண்ணியத்தால் கிடைத்தது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மக்கள் இருக்கும் பொதுக்கூட்டங்களுக்குச் செல்வதில்லை. அரச அதிகாரிகளுடனான கூட்டங்களுக்கே செல்கிறார். ஜனாதிபதி ரணில் பொதுக்கூட்டங்களுக்கு செல்ல பயப்படுகிறார். 2024இல் ஜனாதிபதித் தேர்தலின் பின்னரே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை பற்றி அரச சார்பற்ற நிறுவனங்கள் பேசுகின்றன.

ஆனால், வரிச் சுமையைக் குறைப்பது குறித்து அரச சார்பற்ற அமைப்புக்கள் பேசவில்லை, 9 இலட்சம் வீடுகளுக்கு மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்ட போது ஒரு வார்த்தை கூட பேசவில்லை. குழந்தைகள் மயக்கம் போட்டு விழுந்த போது ஒரு வார்த்தை கூட பேசவில்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்குப் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருக்க வேண்டும்.

ஆனால், பாராளுமன்றத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரம் இல்லை. நாட்டை இரத்தக் கடலாக மாற்றும் நெருக்கடியைத் தவிர்க்க மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு வாய்ப்பு வழங்குங்கள். மக்களுக்குச் சந்தர்ப்பத்தை வழங்குங்கள். அவ்வாறு வழங்கும் பட்சத்தில் மக்கள் தங்கள் விருப்பப்படி முடிவுகளை எடுப்பர் என்றார்.

# சனியன்று நினைவு பேருரை

பேராசிரியர் சொர்ணராஜா தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியைக் கொழும்பு ரோயல் கல்லூரியில் கற்றார்.

அவர் இலங்கை பல்கலைக்கழகத்தில் எல்.எல்.பி (முதல் வகுப்பில்) பட்டம் பெற்றார் மற்றும் சட்ட பீடத்தில் விரிவுரையாளராக இருந்தவர்.

அமெரிக்காவின் யேல் சட்டக்கல்லூரியில் முதுகலைப் பட்டமும் (எல்.எல்.எம்) லண்டன் கிங்ஸ் பல்கலைக்கழகத்தில் எல்.எம் மற்றும் கலாநிதி பட்டங்களையும் பெற்றார்.

இவர் தஸ்மோனியா பல்கலைக்கழகத்தில் சட்டக்கல்லூரியில் தலைவராகப் பதவி வகித்தவர். ஓய்வுக் கால விடுப்பின் போது அவர் கேம்பிரிஜ்ட் பல்கலைக்கழகத்தில் வெளிநாட்டு முதலீடுகளுக்கான சர்வதேச சட்டம் தொடர்பான புத்தகத்தையும் எழுதினார். இது இந்த துறையில் அவரது புகழை நிலைநிறுத்தியது.

# சிறுநீர் கழித்த பொலிஸ் மீது பொலிஸார் தாக்குதல்

சிரேஷ்ட அதிகாரி தன்னை கடுமையாகக் குற்றம் சாட்டியதாகவும் பொலிஸ் பரிசோதகர் செய்த முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இவர் கடந்த 9ஆம் திகதி இரவு பொலிஸ் சிற்றுண்டிச்சாலையில் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்து சிறுநீர் கழிப்பதற்காக மரத்தடிக்குச் சென்றதாக இந்த பொலிஸ் இன்ஸ்பெக்டரின் முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

# இசை நிகழ்ச்சிகளை நடத்தாமல் விடலாம்

தமிழக சினிமா ஒரு பிரமாண்டமான பணம் கொழிக்கும் வியாபாரம். அங்கே யாரும் கலை சேவை செய்யவில்லை. அது ஒரு பணம் புழங்கும் தொழில் என்பதால்தான், இன்று சினிமா பெரும் வளர்ச்சி அடைந்த தொழிலாகி உள்ளது. அதனால்தான் பல புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்களே அதில் இருக்கிறார்கள் என்றார். அதேவேளை, வடக்கில், “இது போர் நிகழ்ந்த பூமி, துன்பம் நிறைந்த பூமி, இங்கே ஆடல், பாடல், கச்சேரி வேண்டாம். அப்படியே, இருந்தாலும் அவை உரிமை கோஷங்களாக மட்டுமே இருக்க வேண்டும்” என்ற ஒரு சிந்தனை நிலைப்பாடும் இருக்கிறது என்றார்..

இவை அனைத்தையும் கணக்கில் எடுத்து, யாழ். மாவட்ட எம்.பிக்கள், மாவட்ட செயலாளர், பொலிஸ், யாழ் மாநகரசபை, சிவில் சமூகம் ஆகியோர் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் கூடி அமர்ந்து பேசி தீர்மானிக்க வேண்டும். சினிமா கலைஞர்கள் அழைத்தால் வருவார்கள். வேண்டாம் என்றால், வர மாட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண முற்றவெளியில் வெள்ளிக்கிழமை (09) நடந்த தமிழக சினிமா கலைஞர்களின் கலை நிகழ்வில் நடந்த துரதிஷ்ட சம்பவங்களைக் கடந்து போக வேண்டும்.

இதை விட இசை நிகழ்வு கலவர பூமியாக மாறி, பலர் கொலையுண்ட சம்பவம் கொழும்பில், 2004ஆம் வருட டிசெம்பர் மாதம் நிகழ்ந்தது. பொலிவூட் நடிகர் ஷாருக்கான் கலை நிகழ்ச்சி நடத்தக் கொழும்பு வந்த போது, குண்டு வீசப்பட்டது. நடிகர், ஷாருக், அப்படியே திருப்பிக்கொண்டு விமான நிலையம் போனவர்தான். இன்று, அவரது உலக வரைபடத்தில் இலங்கை இல்லையாம்.

அந்த வெடிப்பில், எனது சில நண்பர்கள் உட்பட, பல ரசிகர்கள் இறந்தார்கள். பிரபல சோம தேரரின் நினைவு தினமன்று இந்த கலை நிகழ்ச்சி நடத்த ஏற்பாடாகி இருந்ததால், அந்த நிகழ்வைச் சிங்கள-பௌத்த தீவிர அமைப்பினர் எதிர்த்துப் போராடியதால், ஒரு பதற்ற நிலைமை அன்று நிலவியது. அதையடுத்து, இத்தகைய கலை நிகழ்வுகள் தொடர்பில், பல விதிமுறைகள் அமுலுக்கு வந்துள்ளன.

இளம் தலைமுறையினர், இசையை கேட்க, நட்சத்திரங்களை பக்கத்தில் போய் பார்க்கத்தான் ஓடி வந்தார்கள். அதற்குள் போதையில் சிலர் இருந்திருக்கலாம். இப்படியான ஒரு தரப்பு இளையோர் எங்கும் உள்ளார்கள். கொழும்பிலும், சென்னையிலும், லண்டனிலும், சிக்காகோவிலும் உள்ளார்கள். முற்றவெளியில், ஒலி அமைப்பு அரங்கத்தின் மீது இளையோர் ஏறி நின்றார்கள். பாரம் தாங்காமல் அந்த அரங்கு உடைந்து போயிருந்தால், பெரும் உயிர் சேதம் ஏற்பட்டு இருக்கலாம்.

இன்று, கொழும்பில் இந்நிகழ்வுகள் நடக்கின்றன. தொடர்ந்தும் நடக்கும். யாரும் வந்து முறைப்படி பார்க்கலாம். அதற்கான கட்டமைப்புகள் இங்கே இருக்கின்றன. கொழும்பைப் போன்று, யாழில் உள்ளக, வெளியக அரங்க கட்டமைப்புகள் இல்லை. கொழும்பிலும், சுகததாச உள்ளக அரங்கில் அதிகபட்சம் ஐயாயிரம் பேர் கூடலாம். இலட்சக்கணக்கில் கூட உள்ளக அரங்கு சரிவராது. வெளியக விளையாட்டரங்குதான் சரி.



யாழில் கலாசார மண்டபத்தை ரூ. 200 கோடி அளவில் முதலிட்டு கட்டிக்கொடுத்த இந்திய அரசுக்கு அப்போது, இந்த முற்றவெளியை, கொழும்பு சுகததாச அரங்கம் மாதிரி கட்டிக்கொடுங்கள் என யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் யோசனை முன்வைத்துக் கூறி இருக்கலாம். இனியாவது, வெளிநாட்டு அரசுகளோ, புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளோ, இதைச் செய்யலாம். உள்நாட்டில் அடுத்த பல வருடங்களுக்குப் பணம் இல்லை.

ஆகவே, இது தொடர்பிலும், அரசியல்வாதிகள், சிவில் சமூகத்தினர் இடையே கலந்துரையாடல் நடக்க வேண்டும். ஒட்டுமொத்தமாக மக்களின் நிலைப்பாடு இதுவாகத்தான் இருக்குமானால், விடை சுலபமானது.

யாழ்ப்பாணத்தில் இனிமேல் தமிழக சினிமா கலைஞர்களைக் கொண்டு இத்தகைய ஆடல், பாடல், இசை நிகழ்ச்சிகளை நடத்தாமல் விடலாம் என்றார்.



# தோல் நோய் அபாயம்

மேலும் அவர் , குழந்தைகள் விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டால், உட்புற இடங்களைப் பயன்படுத்தவும், தண்ணீர் மற்றும் திரவங்களைத் தவறாமல் குடிக்கவும், இந்த நிபந்தனைகளைப் பின்பற்றாவிட்டால், அவர்கள் வெப்ப அதிர்ச்சி நிலைமைகளால் இறக்கக்கூடும் என்றும் காய்ச்சல் போன்ற அறிகுறிகள் உள்ள குழந்தைகளுக்குக் குளிப்பதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.



# மேபீல்ட் மாணவி துஷ்பிரயோகம்; இருவர் கைது: மக்கள் ஆர்ப்பாட்டம்

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையின் போது பல தடவை குறித்த நபரால் மாணவி துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியமை மற்றும் அதற்கு 45 வயதுடைய நபர் உடந்தையாக இருந்துள்ளமை தெரியவந்துள்ளது .

இந்நிலையில் சந்தேக நபர்களை ஹட்டன் நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் ஞாயிற்றுக்கிழமை (11) ஆஜர்படுத்தியபோது, எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், கைது செய்யப்பட்ட இருவரையும் அவர்களது குடும்பத்தினரையும் தோட்டத்திலிருந்து வெளியேற்றுமாறு குறித்த தோட்டத் தொழிலாளர்கள் போராட்டமொன்றை, திங்கட்கிழமை (12) முன்னெடுத்தனர்.

# இரகசிய கலந்துரையாடல் முடிவின்றி நிறைவு

இதன்போது திருகோணமலையைச் சேர்ந்த குகதாசனும், மட்டக்களப்பைச் சேர்ந்த சிறிநேசனும் பொதுச் செயலாளர் பதவியை ஒவ்வொரு வருடமாகப் பகிர்ந்து கொள்வது தொடர்பில் பேசப்பட்டு இணக்கப்பாடு எட்டப்பட்டது.

எனினும் முதல் ஒரு வருடம் பதவி வகிப்பது யார்? என்பது தொடர்பில் இருவருக்கும் இடையில் இணக்கப்பாடு இன்றி முரண்பாடுகள் ஏற்பட்ட நிலையில் முடிவுகள் எட்டப்படாத நிலை ஏற்பட்டது.

இருவரும் தாம் பொதுச் செயலாளராக வருவதற்குரிய காரணங்களை நியாயப்படுத்தியிருந்தனர். எனினும், இருவரும் பேசி இரண்டு நாட்களுக்குள் முடிவு தருமாறு கூறி நடைபெற்ற இரகசிய கலந்துரையாடல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

# அமெரிக்க பறந்தார் மைத்திரி

மைத்திரிபால சிறிசேன அதே கட்சியைச் சேர்ந்த மேலும் இரு அதிகாரிகளை அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்றுள்ளதாகவும், அவர்கள் அங்கு பல ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுக் கூட்டங்களை நடத்த உள்ளதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பணிப்பாளர் பிரபாத் மாதரகே தெரிவித்தார்.

# “தனித்துவமான வாய்ப்பு உருவாகியுள்ளது”

அவர், விடுத்துள்ள விசேட செய்தி குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“உமா ஓயா திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம், முதன்முதலில், அத்தகைய திட்டங்களின் மூலம் மக்களுக்கு பெரும் நன்மைகள் கிடைத்துள்ளதை கண்டறிந்த அரசாங்கத்திற்கு உரிய அங்கீகாரத்தையும் பாராட்டையும் வழங்கும் புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்க ஒரு தனித்துவமான வாய்ப்பு உருவாகியுள்ளது” என்றும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

# “பெயரை போட முயற்சிப்பது உகந்ததல்ல”

■ ஆ.ரமேஸ்

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக விடயத்தில் பெயரை போட்டுக்கொள்ள வேண்டும் என்று தன்னிச்சையாக எவரேனும் செயல்படுவது உகந்ததல்ல என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மலையக மக்கள் முன்னணி தலைவருமான கலாநிதி வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில், தோட்டத் தொழிலாளர்கள் மூவேளை சாப்பிட்டு ஓரளவு நிம்மதியான வாழ்க்கையை வாழ வேண்டுமென்றால் நாள் ஒன்றுக்கு 2,000 ரூபாய்க்கு அதிகமான சம்பளத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான விளையாட்டு போட்டிகளில் சாதனைகள் படைத்து நாட்டுக்கு பெருமை தேடித்தந்த மலையக வீரர்கள், மற்றும் வீராங்கனைகளை ஊக்குவிக்கும் நிகழ்வு, நுவரெலியாவில் அவரின் உத்தியோகபூர்வ காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (11) இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வின்போது நடைபெற்ற ஊடகவியலாளர்



சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், விலைவாசி உயர்வு, கடன் சுமை, வரிச்சுமை காரணமாக பல்வேறு துன்பங்கள், துயரங்களுக்கு முகங்கொடுத்து வரும் மக்கள் ஒருவேளை, அல்லது இருவேளை உணவைத் தவிர்த்து வாழும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளிவிடப்பட்டுள்ளனர்.

அத்துடன், மலையகத்தில் வாழ்வாதார தொழிலாகத் தேயிலை தொழிலை நம்பி வாழ்க்கை நடத்தி வரும் பெருந் தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்று வழங்கும் நாள் சம்பளமான 1,000 ரூபாய், ஆறு வருடங்களாகப் பேசப்பட்டு, கடந்த இரண்டு வருடத்தில் கிடைத்த சம்பளமாகும் அதுவும் இம்மக்களுக்கு முறையாகக் கிடைப்பதில்லை என சுட்டிக்காட்டினார்.

இப்பொழுது உணவு மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களுக்கு விலைவாசி என்பவற்றின் அடிப்படையில், நாளொன்றுக்கு 2,000 ரூபாய்க்கு மேலதிகமான சம்பள உயர்வு இம்மக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

அதேநேரத்தில், இந்த சம்பளத்தைப் பெற்றுக் கொடுப்பதற்குப் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் கட்சிகள் முடிவு எடுக்க வேண்டும். இந்த சம்பள இணக்கப்பாட்டுக்கு முடிவெடுக்க முடியாவிட்டால் அனைத்து கட்சிகளையும் இணைத்துக்கொண்டு சம்பளத்தை வாங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். இதனைவிடுத்து, இந்த விடயத்தில் பெயரைப் போட்டுக்கொள்ள வேண்டும் என தன்னிச்சையாக எவரேனும் செயல்படுவது உகந்ததல்ல.

அத்துடன், தொழிலாளர்களின் சம்பளம் உட்பட ஏனைய உரிமை, சலுகைகள் அடங்கிய கூட்டு ஒப்பந்தத்தை நாங்கள் எதிர்க்கவில்லை.

மாறாக அதில், சில திருத்தங்களைக் கொண்டு வந்து சம்பளத்திற்கு அப்பால் தொழிலாளர்களுக்குக் கிடைக்கப்பட வேண்டிய சலுகைகள்,வரப்பிரசாதங்கள் முறையாக உள்வாங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

அத்துடன், கூட்டு ஒப்பந்தம் ஊடாக பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பான பேச்சுவார்த்தைக்கு மலையக மக்கள் முன்னணிக்கு அழைப்பு கிடைத்தால் நிச்சயமாக அந்த பேச்சு வார்த்தையில் நாம் கலந்து கொள்வோம்.

அதேநேரத்தில் கூட்டு ஒப்பந்தத்தில் மக்களுக்கு நன்மை கிடைக்குமாக இருந்தால் அதில் கலந்து கொள்வதில் எதுவித ஆட்சேபனையும் எமக்கு கிடையாது எனவும் உறுதியாக தெரிவித்துள்ளார்.



## கச்சதீவு திருவிழா தொடர்பில்
# மக்களுக்கு அறிவுறுத்தல்

■ எம்.றொசாந்த்

கச்சதீவு- புனித அந்தோனியார் ஆலய திருவிழா எதிர்வரும் 23 மற்றும் 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்டச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய, எதிர்வரும் 23ஆம் திகதி காலை 5 மணி தொடக்கம் மு.ப 10 மணி வரை அரச பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திலிருந்து குறிக்கட்டுவான் வரை சேவையில் ஈடுபடும்.

கச்சதீவுக்கான படகுச்சேவையானது குறிக்கட்டுவான், நயினாதீவு மற்றும் கச்சதீவு ஆகிய இறங்குதுறைகளில் இருந்து 23ஆம் திகதி காலை 5 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சேவையில் ஈடுபடுத்தப்படும்.

குறிக்கட்டுவான், நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய இறங்குதுறைகளில் இருந்து, பயணிக்கும் ஒரு நபருக்கான படகிற்குரிய ஒரு வழிப் பயணக் கட்டணம் 1,500 ரூபாய் ஆகும்.

வெளி மாவட்டங்களிலிருந்து தமது சொந்தப் படகுகளில் திருவிழாவிற்குச் செல்வோர், தமது வசிப்பிடங்களிற்கு அருகிலுள்ள கடற்படை முகாம்களில் தொடர்புகொண்டு உரிய கடற்பயணப் பாதுகாப்பு அனுமதியினை பெற்றுக்கொள்வதுடன், படகுகளில் பயணம் செய்பவர்கள் தனித்தனிப் படகாகப் பயணம் செய்யாது குழுவாக இணைந்து பாதுகாப்பான முறையில் பயணிப்பதுடன் 23ஆம் திகதி பிற்பகல் 6 மணிக்கு முன்னதாக கச்சதீவை வந்தடைவதற்கேற்றவாறு தங்களது பயணங்களை ஆரம்பிக்கவேண்டும்.

கச்சதீவு உற்சவத்தில் கலந்து கொள்ளும் யாத்திரிகர்கள் தங்களுக்கு தேவையான உணவு மற்றும் குடிநீர் ஏற்பாடுகளுடன் வருகை தருதல் வேண்டும்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயமானது யாத்திரிகர்களின் புனித தலமாகவுள்ளதால் மது பாவனைப்பொருட்கள் கொண்டு செல்லுதல் மற்றும் பாவித்தல் என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது என மாவட்ட செயலாளர் அறிவித்துள்ளார்.

## தந்தை-மகன் சண்டையில்
# காது, விரல்கள் துண்டாகின

பல்லம- வில்பொத்த பிரதேசத்தில் இடம்பெற்ற விருந்துபசாரத்தின் பின்னர், தந்தைக்கும் மகனுக்கும் இடையில் ஏற்பட்ட சண்டையிலேயே தந்தையின் காதுகளில் ஒன்று துண்டாகியதுடன், மகனின் கை விரல்களில் இரண்டு விரல்கள் துண்டாகியுள்ளதாக பல்லம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வில்பொத்த பகுதியிலுள்ள வீடொன்றில் விருந்துபசாரம் முடிந்து வீடு திரும்பிய 56 வயதுடைய தந்தை உறங்கிக் கொண்டிருந்த போது, மகன் தடியால் தாக்கியதாகவும் தந்தையின் ஒரு காது துண்டாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேநேரம், கண்விழித்த தந்தை, கைக்கு கிடைத்த கத்தியால் மகனைத் தாக்கினார், மகன் தாக்குதலைத் தவிர்க்க முயன்றபோது அவரது இரண்டு விரல்கள் வெட்டப்பட்டுள்ளன என்றும் அறியமுடிகின்றது.

# செந்தில் தொண்டமானுக்கு நன்றி தெரிவித்த தமிழக அரசு

■ ஏ.எச். ஹஸ்பர்

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுடைய ஏற்பாட்டில் தமிழகத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டிற்கான அயலக தமிழர் மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும்,கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமானுக்கு தமிழக அரசு நன்றி தெரிவித்துள்ளது.

மேலும் புலம்பெயர் தமிழர்களின் கலை, கலாச்சாரத்தை எடுத்துரைத்து அயலக தமிழர் மாநாடு வெற்றியடைய வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றிகளை மற்றும் அயலக தமிழர் மாநாட்டில்



செந்தில் தொண்டமான் பங்கேற்று நிகழ்வைக் கௌரவப்படுத்தியமை மகிழ்ச்சி அளிப்பதாகவும், எதிர்கால நிகழ்வுகளுக்கு தங்களின் ஒத்துழைப்பு மிக முக்கியமானது எனவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

## வரவு- செலவுத் திட்ட செயல்முறையில்
# பாலினக் கண்ணோட்டம் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்

இலங்கையின் முறைசார் ஊழியர் படையணியில் பாரம்பரியமாக ஆண்களைவிடப் பெண்களின் பங்களிப்புக் குறைவாக இருப்பதால் வரவு- செலவுத் திட்ட செயல்முறையில் பாலினக் கண்ணோட்டமும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் எனப் பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் வைத்திய கலாநிதி சீதா அரம்பேபொல மற்றும் வைத்திய கலாநிதி சுதர்ஷனி பெர்னாந்துபுள்ளே ஆகியோரின் தலைமையில் வியாழக்கிழமை (08) நடைபெற்ற பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியக் கூட்டத்திலேயே இவ்விடயம் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதில் உத்தேச பாலினக் கண்ணோட்டத்திலான வரவு- செலவுத் திட்ட சட்டமூலம் குறித்து பங்குதாரர்களுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதற்கமைய வரவு- செலவுத் திட்டம் தயாரிக்கும்போதும், நடைமுறைப்படுத்தும்போதும், மதிப்பீடு செய்யும்போதும் பாலின மதிப்பாய்வுகளை உள்ளடக்குவதற்கான கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கு இணக்கம் காணப்பட்டதுடன், பாலினக் கண்ணோட்டத்திலான வரவு- செலவுத் திட்ட தயாரிப்பின் தாக்கத்தைக் கண்காணிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்திற்கான 25% இடஒதுக்கீட்டை மூலோபாயமாக்குவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், நாட்டின் மக்கள் தொகையில் 50% உள்ள பெண்களை இப்பணிக்காக அணிதிரட்டுவதன் முக்கியத்துவத்தையும் ஒன்றியம் வலியுறுத்தியது.

அதேநேரம், 2-5 வயது வரையுள்ள குழந்தைகளைக் கொண்ட தாய்மார் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்காகச் செல்லும் விடயம் குறித்தும் இதில் கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டத்தில், இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான ரோஹிணி குமாரி, ஹர்ஷ த சில்வா, மஞ்சுளா திசாநாயக, கோகிலா குணவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ரயிலுடன் மோதி சிறுவன் பலி

■ அப்துல்ஸலாம் யாசீம்

திருகோணமலை - தம்பலகாமம் பகுதியில் ரயிலுடன் மோதி சிறுவனொருவன் உயிரிழந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (11) பதிவாகியுள்ளது.

முள்ளிப்பொத்தானை- யூனிட்-07 பகுதியை சேர்ந்த 14 வயதுடைய நளீம் முஹம்மது சபரிட் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவன் பாலத்துக்கு அருகில் சக நண்பர்களுடன் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி பயணித்த ரயிலுடன் மோதி



விபத்துக்குள்ளாகியதாக தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தம்பலகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வர்த்தக நிலையங்களை உடைத்து கொள்ளை

■ டீ.சந்ரு செ.திவாகரன்

நுவரெலியா பிரதான நகரில் உள்ள இரண்டு வர்த்தக நிலையங்களை உடைத்து கொள்ளையிடப்பட்ட சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (11) இரவு இடம்பெற்றுள்ளது.

வழமைபோன்று திங்கட்கிழமை (12) காலை வர்த்தக நிலையங்களுக்கு சென்ற உரிமையாளர், குறித்த வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டுள்ளமையை கண்டு, இது தொடர்பில் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஒரே உரிமையாளரின் இரண்டு வர்த்தக நிலையங்களான



பல்பொருள் வர்த்தக நிலையம் மற்றும் விவசாய மருந்து வர்த்தக நிலையத்தின் பின் கதவினை உடைத்து உள்நுழைந்த கொள்ளையர்கள் அங்கிருந்த பணம் மற்றும் சிகரெட் பாக்கெட்டுகளையும் சில பெறுமதியான பொருட்களையும் கொள்ளையிட்டு சென்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது

இந்நிலையில், கொள்ளையடிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் பணத்தின் பெறுமதி இதுவரையில் கண்டறியப்படவில்லை எனவும் இக்கொள்ளை இடம்பெறும்போது, வர்த்தக நிலையத்தின் பணியாளர்கள் கடையின் பின்புறம் உறக்கத்தில் இருந்துள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

மேலும் சம்பவம் தொடர்பாக அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கண்காணிப்புக் கமராவில் பதிவான காட்சியின் உதவியினைக் கொண்டு தடயவியல் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மூன்று இடங்களில் இருந்து மூன்று சடலங்கள் மீட்பு

அம்பாறை, பலாங்கொடை மற்றும் நுவரெலியா ஆகிய பிரதேசங்களில் இருந்து மூன்று சடலங்கள், திங்கட்கிழமை (12) மாலை வரையிலும் மீட்கப்பட்டுள்ளதாக அந்தந்த பகுதிகளுக்குப் பொறுப்பான பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாண்டிருப்பு கடற்கரையில் உயிரிழந்த நிலையில் திங்கட்கிழமை (12) முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

உயிரிழந்தவர் 50 அல்லது 55 வயதுக்கு உட்பட்டவராக இருக்க முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை பெரியநீலாவனை பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பலாங்கொடை- பெட்டிகல பிரதேசத்தில் வீடொன்றின் குளியலறையில் இருந்து பாடசாலை மாணவி ஒருவரின் சடலம் ஞாயிற்றுக்கிழமை (11) மீட்கப்பட்டுள்ளது.



சம்பவம் தொடர்பில் உறவினர்கள் வழங்கிய முறைப்பாட்டுக்கமைய, பலாங்கொடை பொலிஸாரால் குறித்த மாணவியின் சடலம் மீட்கப்பட்டுள்ளதுடன், இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட மாணவி பலாங்கொடை

பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் உயர்தர வகுப்பில் கல்வி கற்றவர் என தெரியவந்துள்ளது.

சடலம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், நுவரெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொத்மலை ஓயாவிலிருந்து பழனிவேல் செல்வகுமாரி (வயது 45) என்ற பெண், சடலமொன்று திங்கட்கிழமை (12) மீட்கப்பட்டுள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவிக்கின்றனர். நுவரெலியா மாவட்ட நீதவான் விசாரணை மேற்கொண்டதன் பின்னர் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் தொடர்பான மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

- பி.கேதீஸ், ஆ.ரமேஸ், எஸ்.கௌசல்யா, ஏ.எல்.எம்.ஷினாஸ்

# மன்னாரில் 13 வயதுடைய சிறுமி சடலமாக மீட்பு

■ றொசேரியன் லெம்பட்

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி,எருக்கலம்பிட்டி 1ஆம் வட்டார பகுதியில் 13 வயதுடைய சிறுமி ஒருவர் திங்கட்கிழமை(12) அதிகாலை தனது வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்கா

காணாமல் போயிருந்த சிறுமி, தொடர்பில் அவரது பெற்றோர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

வவுனியாவில் உள்ள சிறுவர் நிலையம் ஒன்றுக்கு அச்சிறுமி சென்ற நிலையில் அங்கிருந்து ஞாயிற்றுக்கிழமை (11) மீட்கப்பட்டு மன்னார் எருக்கலம்பிட்டி 1 ஆம் வட்டார பகுதியில் உள்ள வீட்டிற்கு அழைத்து வரப் பட்டுள்ளார். இந்த நிலையில், தன்னுயிரை மாய்த்துக்கொண்ட நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், குறித்த சிறுமியின் மரணம் தொடர்பாக மன்னார் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# நோயாளிகளுக்கு சாவு மணி அடிக்கும் பணிப்பகிஷ்கரிப்பு

பல சுகாதார சங்கங்கள் சில நாட்களுக்கு முன்பும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டன. அந்நாட்களில், இராணுவ அதிகாரிகள் கடமையாற்றியதன் காரணமாக வைத்தியசாலை சேவைகளை ஓரளவுக்குப் பேண முடிந்தது. என்றாலும் அரச வைத்தியசாலைகளுக்கு வரும் நோயாளர்கள் பெரும் சிரமத்துக்கு முகம் கொடுத்தனர்.

இந்நிலையில், இன்று (13) முதல் மீண்டும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாகச் சுகாதார சங்கங்கள் அறிவித்துள்ளன. இது நோயாளர்களுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில், எவ்விதமான ஐயப்பாடும் இல்லை.

வைத்தியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு தீர்மானம் இடைநிறுத்தப்பட்டுள்ளமை நோயாளர்களுக்கு அதிருஷ்டம் என்றாலும், சுகாதாரத்துறையில் வைத்தியர்கள் அல்லாதவர்கள் முன்னெடுத்த வேலைநிறுத்தப் போராட்டத்தினால் நோயாளர்கள் பரிதவிப்புக்கு உள்ளாகியுள்ளனர். வேலைநிறுத்தம் என்பது அதிக செலவு மற்றும் மருந்து தட்டுப்பாட்டுடன் போராடும் நோயாளிகளுக்குச் சாவு மணி அடிக்கிறது.

சுகாதார ஊழியர்களின் வேலை நிறுத்தத்தின் போது, நோயாளிகளுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துகளுக்கு எல்லையே இல்லை. சில நேரங்களில் அது நோயாளியின் மரணமாகவும் இருக்கலாம்.

கடந்த சில நாட்களாக மருத்துவமனைகளில் வேலைநிறுத்தப் போராட்டத்தின் போது சிகிச்சைக்காக வந்த நோயாளிகள் படும் அவஸ்தைகளை அனைவரும் பார்த்தனர். அரசாங்க அதிகாரிகளின் முயற்சிகள் இருந்தபோதிலும், நிலைமையை எதிர்கொள்வது எளிதான காரியமாக இருக்கவில்லை. டாக்டர்கள் இருந்தபோதிலும், பல நோயாளிகள் திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது. சுகாதார ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் ஒட்டுமொத்த அரசு மருத்துவமனை அமைப்பும் முடங்கியுள்ளது.

இப்படிப்பட்ட நிலையில் நோயாளிகளின் உயிரைக் கடவுளிடம் ஒப்படைப்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது. வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்ளாவிட்டாலும், சுகாதார சேவையின் ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் கடமைக்கு சமூகமளிக்காததன் மூலம் வைத்தியசாலை முறையே முடங்கியுள்ளது என்பது தெளிவாகின்றது.

மருத்துவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகையை மற்ற சுகாதார ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையைச் சீரான முறையில் ஆய்வு செய்ய வேண்டும். இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டிய பொறுப்பு அரசு அதிகாரிகளுக்கு உள்ளது.

மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது நாட்டில் கடுமையான சுகாதாரப் பிரச்சினையை உருவாக்கியுள்ளது. கடந்த இரண்டு வருடங்களில் விசேட வைத்தியர்கள் 250 பேர் உட்பட சுமார் 1,000 வைத்தியர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், சுகாதாரத்துறையினரின் வேலைநிறுத்த அறிவிப்பால் நோயாளர்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருக்க வேண்டிய நிலைமையே ஏற்பட்டுள்ளது. மருந்துகளின் விலைகள், கொள்வனவு செய்வதற்குப் போதியளவில் பணம் இல்லாமை உள்ளிட்ட காரணங்களால், அரச வைத்தியசாலைகளை நாடும் சாதாரண மக்களின் நிலைமை திண்டாடுகின்றது.

தொழிற்சங்க நடவடிக்கைகளில் குதித்திருப்போரின் பிரச்சினைகளைத் தீர்க்கும் அதேவேளை, நோயாளர்களும் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதில் கவனம் செலுத்தவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

அறியாமை என்பது மிகவும் பாரதூரமானது. அறியாமையில் புகுந்து கொள்ளும்போது, வாழ்க்கையின் அழகும், வதனமும் மறைந்து போகின்றன. நல்லதும் சிறப்பானதுமான சிந்தனைகளைச் சிரசில் ஏற்றாமல், தன்னறிவும் கிரகித்தல் அறிவும் இன்றி வாழ்ந்தால், புறக்கணிக்கக் கூடாத நற்பயன்கள், பெறுபேறுகளை இழந்துபோவதை அறியாமல் வாழவேண்டி வரும். இது ஒரு துர்ப்பாக்கிய நிலை.

எந்த ஒரு விடயத்தையும் அங்கீகரிக்க முன்னர், அதைப் பகுத்தறிந்து, சிந்தனைக்குள் புகுத்திக் கொள்ளவேண்டும். சின்னக் குழந்தைகள் கூட கேள்விகளைக் கேட்டு, எங்களைத் திக்குமுக்காடச் செய்கிறார்கள். அவர்களது சந்தேகங்களுக்கு முழுமையாக விடையறிய முடியா விட்டாலும் அதை அப்படியே விட்டுவிடுவதும் இல்லை. சில சமயங்களில், அவர்களின் கேள்விகளால் நாங்களும் ஆச்சரியப்படுகின்றோம்.

தெரியாத விடயங்களுக்குள் அமிழ்ந்து போதலாகாது. தெரியாத விடங்களில் முடிவு எடுப்பதும் முட்டாள் தனம். சிறந்த முறையில் பாதை அமைந்தால், ஆன்மாவும் களிப்படையும். ஆன்மாவும் கருமங்களும் ஒன்றுக்கொன்று இயைபுபட வேண்டும். சரியான விடயங்களால் தேகம் களிப்படைகின்றது. இதனால், விழிப்புநிலை தானாக மலரும். விருப்பத்துடன் செய்க; அதைச் சரியாகச் செய்க.

நன்றி–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## முஸ்லிம் எம்.பி.க்களின்

# இரகசியப் பேச்சுக்களால் சமூகத்துக்கு என்ன பலன்?

மொஹமட் பாதுஷா

பல வருடங்களுக்கு முன்னர், எதிர்த்தரப்பில் இருந்த ஒரு முஸ்லிம் கட்சி திடீரென ஆளும் தரப்பிற்கு ஆதரவளிக்க முடிவு செய்தது. இது, அக்கட்சித் தலைவர் பொதுவெளியில் வெளிப்படுத்திய கொள்கைக்கு முற்றிலும் முரணானதாக முடிவாக அமைந்திருந்தது.

அப்போது, அந்த முஸ்லிம் தலைவரை தொடர்புகொண்ட முக்கிய நபர் ஒருவர் "ஏன் இப்படிச் செய்தீர்கள்?" எனக் கேட்டார். "இந்தக் கட்சியில் உள்ள எல்லா எம்.பி.க்களும் அந்தப் பக்கம் போக இரகசிய டீல் பேசி விட்டார்கள். அவர்கள் எல்லாரும் சென்றால் கட்சியும் சின்னமும் நானும் மட்டும்தான் இருப்போம். எனவே, வேறு வழியின்றி நானும் ஆதரவளிக்கும் முடிவை எடுத்தேன்" என்றாராம்.

இப்படியான சம்பவங்கள் முஸ்லிம் அரசியலில் பல தடவை இடம்பெற்றிருக்கின்றது. எம்.பிக்கள் பின்கதவால் அரசாங்கத்துடன் அல்லது எதிரணியுடன் பேரம் பேசுவதும், பின்னர் கட்சியின் தலைவர், செயலாளரும் அந்தப் பக்கம் தாவுவதும் நமக்குப் பழகிப்போன ஒன்றுதான்.

இது ஆச்சரியமில்லை. ஆனால், பல சந்தர்ப்பங்களில் இவ்வாறாகக் கட்சி தாவும் முடிவுகளை, ஒரு சட்டமூலத்திற்கு ஆதரவளிக்கும் முடிவுகளை எடுப்பதற்கு 'உண்மையில் தலைவரே ரகசியமாகக் காய் நகர்த்தினார்' என்று கட்சியின் எம்.பிக்கள் பின்னாளில் கூறுவதுதான் ஆச்சரியமாகும்.

முஸ்லிம் எம்.பி.க்கள் எதிர்க்கட்சி அரசியலை செய்ய திராணியற்றவர்கள் என்பது ஒரு புறமிருக்க, அரசாங்கத்துடன் இணைந்து செயற்படவேண்டிய சில தேவைகளும் உள்ளன. ஆனால், இவ்வகையான எல்லா முஸ்லிம் எம்.பிக்களின் எல்லாக் காரணங்களும் சமூகம் சார்ந்தவை அல்ல என்பதை மறந்து விடக் கூடாது.

இப்போது தேர்தல் பற்றிய பேச்சுக்கள் பரவலாக உலா வருகின்றன. தங்களை ஜனநாயக விரும்பியாக, தேர்தலுக்கு அச்சப்படாத ஆட்சியாளராக காட்டிக்கொள்வதற்காக இவ்வாறான பிம்பங்களை அதிகாரத்தில் உள்ளவர்கள் கட்டமைக்கின்றார்கள்.

ஆனால், சாதாரண எம்.பிக்கள் தொடக்கம் அதிகாரத்தின் உயர் மட்டம் வரைக்கும், எல்லா தரப்புக்களுக்கும் தேர்தலின் வெற்றி - தோல்வி குறித்த பயம், நிச்சயமின்மை உள்ளுக்குள் இருக்கின்றது என்பதே யதார்த்தமாகும்.

இவ்வாறான நிலையில், புதிய வியூகங்கள், கூட்டணிகள் அமைக்கும் நகர்வுகளும் எம்.பிக்களின் ஆதரவை திரட்டும் முயற்சிகளும் எல்லா தரப்பிலும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

முஸ்லிம் கட்சிகள் மற்றும் இதர கட்சிகள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் எம்.பிக்களில் கணிசமானோர் ஏற்கெனவே வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கின்றார்கள்.

இந்நிலையில், முஸ்லிம் கட்சிகளின் எம்.பிக்கள் சிலர், இரகசியமாக ஆளும் தரப்புடன் பேசி வருவதாகத் தகவல் கசிந்துள்ளது. சில முஸ்லிம் எம்.பிக்கள் ஏனைய பெருந்தேசியக் கட்சிகளுடனும் சந்திப்புக்கான முஸ்தீபுகளை மேற்கொள்வதாகக் கூறப்படுகின்றது.

'ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முஸ்லிம் கட்சிகளின் எம்.பிக்களுடன் தனித்தனியாக பேச்சுக்களை நடத்தக் கூடாது என்றும், கட்சி என்ற அடிப்படையில் தலைமையுடனேயே பேச முன்வர வேண்டும்' பிரதான முஸ்லிம் கட்சியான முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் சில தினங்களுக்கு முன்னர் வலியுறுத்தியுள்ளார்.

ஆகவே, இப்படியான தனித்தனியான, பின்கதவு சந்திப்புக்கள் இடம்பெறுகின்றன என்ற தகவல்களின் உண்மைத்தன்மையை அவர் உட்கிடையாக உறுதிப்படுத்தியிருக்கின்றார் என்றுதான் கருத வேண்டியுள்ளது.

இதே நிலை மக்கள் காங்கிரஸ் போன்ற கட்சிகளிலும் ஏனைய முஸ்லிம் எம்.பிக்களிடையேயும் நிலவுகின்றது என்பது மக்கள் அறியாத விடயமல்ல.

முஸ்லிம் அரசியல்வாதிகள் குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு கடமைப் பொறுப்பு இருக்கின்றது. பல விடயங்கள் முஸ்லிம் சமூகத்தின் பொதுவான பிரச்சினைகளாக இருந்தாலும் கூட பிரதேச ரீதியாகப் பிரத்தியேகமான பிரச்சினைகளும், மக்களுக்குச் செய்ய வேண்டிய சேவைகளும் உள்ளன என்பதை மறுக்கவியலாது.

ஆனால், இங்கிருக்கின்ற கேள்வி வேறு மாதிரியானது!

அதாவது, தேர்தல் காலத்தில் முஸ்லிம் எம்.பிக்கள் முஸ்லிம் கட்சிகள், சின்னங்களின் ஊடாகவே தம்மை மக்கள் மன்றத்தில் முன்னிலைப்படுத்துகின்றனர். கட்சி, கொள்கை, கோட்பாடு என்ற அடையாளத்தை முன்னிறுத்தியே பெரும்பாலும் தேர்தலில் குதிக்கின்றனர்.

தம்மை நம்பி மட்டும் வாக்களிக்குமாறும் கட்சியை நம்ப வேண்டிய அவசியமில்லை என்றும் எந்த முஸ்லிம் வேட்பாளரும் கூறுவதில்லை. கட்சி என்ற அடையாளத்தைத் துறந்து, சுயேச்சையாக நின்று வெற்றி பெற்ற வரலாறும் மிகக் குறைவாகும்.

ஆகவே, கட்சி என்ற அடிப்படையில் ஒட்டுமொத்தமாக முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளையே மக்கள் பெரிதும் விரும்புவர். அதுமட்டுமன்றி கூட்டாக ஒரு கோரிக்கையை முன்வைக்கும் போது அது பலமானதாகவும் அமையும்.

அதைவிடுத்து, தனித்தனியாக சந்திப்பதும் பெருந்தேசிய தலைவர்களுடன் பேசுவதும் தவறு என்று கூறுவதற்கில்லை. ஆனால், கடந்த காலங்களில் இவ்வாறான பேச்சுக்கள் குறிப்பிட்ட எம்.பிக்களுக்கு தனிப்பட்ட அனுகூலங்களையே ஒப்பீட்டளவில் அதிகமாகப் பெற்றுக் கொடுத்தன எனலாம்.

அதற்காக கட்சித் தலைவர்கள் செய்வது எல்லாம் சரி என்று சொல்வதற்கில்லை. அவர்கள் பல நேரங்களில் பொறுப்பற்ற தனமாகச் செயற்படுகின்றனர். தமது இலாப நட்டங்களைப் பார்க்கின்றனர். எம்.பிக்களுக்குப் பின்னால் ஒழிந்து கொண்டு, இரட்டை-விளையாட்டு (டபள் கேம்) ஆடுகின்றனர் என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

ஆனால், இதனையெல்லாம் தாண்டி கட்சி என்ற ஒற்றுமை மிக முக்கியமானது. எல்லா முஸ்லிம் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவையுள்ள ஒரு காலகட்டத்தில். ஒரு குறிப்பிட்ட முஸ்லிம் கட்சிக்குள்ளேயே, இந்த முரண் நிலை ஏற்படக்கூடாது.

இவ்வாறு நாம் வலியுறுத்துகின்ற சந்தர்ப்பத்தில், "அப்படியில்லை" என்று எந்த முஸ்லிம் அரசியல்வாதியாவது மறுப்பாராயின், "தனிப்பட்ட ரகசிய டீல்கள் ஊடாக நாம் சமூகத்திற்கு நிறைய நன்மைகளைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றோம்" என்று கூறுவாராயின், அதனை அவர்கள் வெளிப்படுத்தட்டும்.

கடந்த காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள், தற்போது மக்கள் பிரதிநிதியாக இருப்பவர்கள் கூட்டாக தமது சமூகத்திற்காக எந்தக் கோரிக்கைகளை முன்வைத்தார்கள் என்பதையும், பின்கதவு பேச்சுக்கள் ஊடாக சமூகத்திற்கு என்ன நன்மை கிடைத்தது என்பதையும் பட்டியலிட முடியும்.

முஸ்லிம் தலைவர்கள், எம்.பிக்களின் கடந்தகால இரகசியப் பேச்சுக்கள், டீல்கள், அதற்குக் கைமாறாக வழங்கப்பட்ட வெகுமதிகள் பற்றியெல்லாம் ஏராளமான கதைகள் உள்ளன. இதனால் எம்.பி, அல்லது தலைவர் நன்மை அடைந்தாரா? சமூகம் நன்மை பெற்றதா? என்பது முஸ்லிம் மக்களுக்குத் தெரியும்.

கூட்டு நகர்வுகளால் அன்றி, இரகசிய சந்திப்புக்களின் ஊடாகவே மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என நம்புகின்ற முஸ்லிம் எம்.பிக்கள், தாராளமாக அதனைச் செய்யலாம். ஆனால், அதன் பெறுபேற்றை வெளிப்படுத்த வேண்டும்.

இதுவரை காலம் தேர்தலுக்கு முந்திய நாட்களில் இடம்பெற்ற தனிப்பட்ட டீல்களின் ஊடாக தங்களுக்கு வெகுமதி கிடைத்ததா? அல்லது சமூகத்திற்கு அனுகூலத்தைப் பெற்றுக்கொடுத்தார்களா? என்பதை நிரூபிக்க வேண்டும்.

இந்த விடயத்தில் முஸ்லிம் கட்சித் தலைவர்களிலும் தவறிருக்கின்றது. எம்.பிக்களை வழிப்படுத்துவது என்றால், முதலில் தலைவர்கள் சரியான வழியில் பயணிக்க வேண்டும். அதிலும் குறைபாடு உள்ளது.

கட்சியின் கொள்கையை மீறிச் செயற்படுகின்ற எம்.பிக்கு, கட்சியின் முடிவைப் புறக்கணித்து சட்டமூலத்திற்கு. அரசியலமைப்பு திருத்தத்திற்கு ஆதரவளிக்கின்ற எம்.பிக்கு எதிராக தலைவர்கள் சரியாக நடவடிக்கை எடுக்கவில்லை.

அதேபோல், தலைவர்களும், தளபதிகளும் எம்.பிக்களும் தங்களுக்கு விரும்பியதை எல்லாம் செய்து விட்டு, கடைசியில் தேர்தல் மேடையில் ஏறி, ஏமாற்று வார்த்தைகளைக் கூறி வாக்குக் கேட்கின்ற போது, முஸ்லிம் சமூகம் அவர்களுக்கு அழுத்தமான பாடமொன்றைப் புகட்டியிருந்தால், மீண்டும் இப்படியொரு நிலை ஏற்பட்டிருக்காது.

## கடிதங்கள்

### பாடசாலையின் கூரைகள் சேதம்

முல்லைத்தீவு-தேவிபுரம் அ.த.க. பாடசாலையின் கூரைகளின் மரங்கள் சேதமடைந்து காணப்படுவதால் எந்த நேரத்திலும் கூரைகள் வீழ்ந்து விடும் என்ற அச்சத்தில் மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

1964இல் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில் தற்போது 158 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

தரம் 01 தொடக்கம் தரம் 11 வரை மாணவர்கள் இப்பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர்.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அமைக்கப்பட்ட கட்டடங்களுடன் 2010இல் மீள் குடியேற்றத்தின் பின்னர் இப்பாடசாலையில் கட்டடங்கள் அமைக்கப்பட்டன.

தற்போது, கூரைகளில் உள்ள மரங்களே சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இது தொடர்பில் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனை, புதுக்குடியிருப்பு கல்வி கோட்டம் என்பவற்றில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சேதமடைந்துள்ள கூரைகளின் மரங்களை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– நடராசா கிருஸ்ணகுமார்





# சமத்துவத்தின் சாட்சி ஆபிரகாம் லிங்கன்

## பெப்ரவரி 12ஆம் திகதி பிறந்தநாள்




வோ.இ.டிலக்ஸன்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அமெரிக்காவில் ஆபிரகாம் லிங்கனின் உயர்ந்த உருவம் அந்நாட்டின் சுதந்திரத்தின் பாதுகாவலனாகவும் நீடித்த ஞானத்தின் களஞ்சியமாகவும் சமத்துவத்தின் சாட்சியாகவும் நிற்கின்றது. காலம் ஒவ்வொரு கடினமான காலத்திற்குப் பின்பும் மகிழ்ச்சியான காலத்தை ஒழித்து வைத்திருக்கின்றது என்பதை ஆபிரகாம் லிங்கனின் வாழ்க்கை கற்பிக்கின்றது.

அமெரிக்காவில் கென்டக்கி எல்லையில் ஒரு தனியறை கொண்ட மர வீட்டில் 1809 பெப்ரவரி 12ஆம் திகதி, பிறந்த லிங்கன், தனது வாழ்க்கையை எளிமையான தொடக்கத்தில் இருந்து அமெரிக்காவின் 16ஆவது ஜனாதிபதியாக உயர்ந்து அந்நாட்டின் மிகவும் கொந்தளிப்பான காலகட்டங்களில் ஒன்றான அமெரிக்க உள்நாட்டு போரின்போது, அந்த தேசத்தின் மீது ஓர் அழியாத அடையாளத்தை விட்டுச் சென்றார்.

லிங்கனின் ஆரம்பகால வாழ்க்கை இன்னல்கள் மற்றும் இடைவிடாத அறிவினை தேடிய நாட்டம் என்பவற்றால் நிறைந்திருந்தது. அமெரிக்காவில் ஒரு எல்லைப்புறச் சூழலில் வளர்ந்த அவர், குறைந்த அளவிலான பள்ளிக் கல்வியையே பெறக்கூடியவராகக் காணப்பட்டார். இதற்கு லிங்கனின் குடும்பத்தின் பொருளாதார நிலையும் அவரது தாயாரது இறப்பும் காரணமாக அமைந்தது. இருப்பினும் அவர் ஓர் ஆர்வம் மிகுந்த வாசகராக காணப்பட்டார். காசில்லாத போதும் கடன் வாங்கிய புத்தகங்களுடன் தன்னுடைய சூழ்நிலைக்கு மேல் உயரும் உறுதியுடன் தனக்குத்தானே கற்பித்துக் கொண்டார். லிங்கனுடைய அறிவினை நோக்கிய தேடல், இளம் வயதில் அவரை சுயமாகப் படித்து உருவான வழக்கறிஞராக மாற்றியதுடன், அவரது நேர்மை மற்றும் மக்களைத் தூண்டக்கூடிய பேச்சாற்றல் மக்கள் மத்தியில் அவரை புகழ் பெறவும் செய்தது.



ஒரு வழக்கறிஞராக சட்டம் எனும் சட்டகத்திற்குள் சாதித்துக் கொண்டிருந்த லிங்கனின் பயணம், 1834இல் இலியானாய்ஸ் மாநில சட்டமன்றத்துக்கு தேர்வானபோது, அனைத்து மக்களுக்கான அரசியல் பயணமாக மாற்றமடைந்தது. இந்த அரசியல் பிரவேசம் அவரை அமெரிக்காவின் தேசிய அரங்கிற்கு அழைத்துச் செல்லும் ஒரு பாதையின் தொடக்கத்தைக் காட்டி நின்றது. இதற்கமைய, 1858ஆம் ஆண்டு இலியானாய்ஸ் செனட் பிரசாரத்தின்போது, அமெரிக்க ஜனநாயகக் கட்சியை சேர்ந்த ஸ்டீவன் ஏ.டக்ளஸுடன், அமெரிக்க குடியரசுக் கட்சியின் சார்பாக செயற்பட்டு வந்த லிங்கனின் விவாதங்கள் அமெரிக்க மக்கள் அனைவரது மத்தியிலும் கவனம் பெறச் செய்திருந்தது.

குறிப்பாக இவ்வாதங்களில் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த டக்ளஸின் பேச்சுக்கள் முழுமையான நிற வெறியின் வெளிப்பாடுகளாகக் காணப்பட்டது. அமெரிக்கத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை வெள்ளையர்களுக்கு மட்டுமே உரித்தானது என டக்ளஸ் தெரிவித்ததிலிருந்து அதனை அறிந்து கொள்ள முடிந்தது. ஆனால், மாறாக லிங்கனின் அரசியல் புரிதல் என்பது அனைத்து மக்களுக்கானதாக காணப்பட்டது. குறிப்பாக அடிமைத்தனம் பற்றி லிங்கன் கொண்டிருந்த தார்மீகத் தெளிவு இந்த விவாதங்கள் மூலம் வெளிக்காட்டப்பட்டதுடன், அன்று அமெரிக்காவில் அடிமைத்தனத்திற்கு உட்பட்டிருந்த கறுப்பின மக்களுக்கு லிங்கன் ஒரு நம்பிக்கை நாயகனாகத் தெரிந்தார். இவ்வாறு பொதுவான மக்கள் மத்தியிலும் லிங்கனின் அரசியல் தெளிவு பற்றி ஏற்பட்டிருந்த நம்பிக்கை அமெரிக்காவில் பிற்காலங்களில் ஏற்படப்போகும் அரசியல் மற்றும் சமூக மாற்றத்தை முன்னறிவித்தது.

1860இல் அமெரிக்க குடியரசுக் கட்சி லிங்கனை வேட்பாளராக அறிவித்தமை அமெரிக்க வரலாற்றின் போக்கை மனிதாபிமானத்தின் நிழலிற்குக் கொண்டுவரும் போக்காக அமைந்தது. ஜனாதிபதித் தேர்தலில் லிங்கன் வேட்பாளராகக் களம் காண்கிறார் என்பது அப்போது கறுப்பின மக்களுக்குத் தமது விடுதலைக்கான அத்திபாரம் இடப்படப் போகின்றது என்பதை உணர்த்தியது. இதனால் கறுப்பின மக்கள் அனைவரும் தமது முழு ஆதரவையும் லிங்கனுக்கு வழங்கினர்.

1860 தேர்தலில் வெற்றிபெற்ற லிங்கன், தென்பகுதி அமெரிக்க மக்களாலும் அரசியல்வாதிகளாலும் கடுமையாக எதிர்க்கப்பட்டதுடன், விமர்சிக்கவும்பட்டார். லிங்கன் அமெரிக்காவில் அடிமைத்தனத்தை ஒழிப்பதை தனது கொள்கையாக கொண்டிருந்ததாலும், தேர்தல் பிரசாரத்தின்போது, அதற்கான பிரசாரங்களை அதிகமாக மேற்கொண்டிருந்தமையும் நிற வெறி கொண்டிருந்த தென்பகுதி அமெரிக்கர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியிருந்தது. இருப்பினும், தடைகளையெல்லாம் கடந்து 1861இல் லிங்கன் அமெரிக்காவின் 16ஆவது ஜனாதிபதியாக வெற்றிபெற்றார். வட பகுதி அமெரிக்க மக்களின் செல்வாக்கிலேயே லிங்கனின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால், ஜனாதிபதி நாற்காலியில் அமர்ந்த உடனேயே லிங்கனுக்கு பெரும் சவாலாக அமைந்தது அமெரிக்க உள்நாட்டுப் போர்.

அமெரிக்க உள்நாட்டுப் போர் கறுப்பினத்தவர்களை தொடர்ந்து அடிமைகளாகவே வைத்திருப்பதற்கும், அவர்களுக்கு சுதந்திரத்தை வழங்காதிருப்பதற்கும் நிற வெறி கொண்டிருந்த அமெரிக்கர்களால் மேற்கொள்ளப்பட்டது. இந்நேரத்தில், லிங்கன் கறுப்பின மக்களின் விடுதலைக்காக முழு வீச்சுடன் செயற்பட்டுக் கொண்டிருந்தார்.

இதற்கமைய அமெரிக்க முதலாளிமார்களின் பண்ணைகளிலும், தோட்டங்களிலும், தொழிற்சாலைகளிலும், வீடுகளிலும் அடிமைகளாக இருந்த கறுப்பின மக்களின் விடுதலை குறித்து 1863இல் லிங்கனின் நிர்வாகத்தின் கீழ் விடுதலைப் பிரகடனம் ஒன்று வெளியிடப்பட்டது.

ஆனால், இந்த விடுதலைப் பிரகடனம் வெளியிடப்பட்டு இரண்டு ஆண்டுகளாகியும் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வரவில்லை. இதனால் அமெரிக்காவில் அடிமைத்தனத்திற்கும் ஒரு தீர்வு கிடைக்கவில்லை. குறிப்பாக 1863இல் விடுதலைப் பிரகடனம் வெளியிடப்பட்டிருந்தாலும் கறுப்பின மக்கள் அமெரிக்க முதலாளிமார்களாலும் நிற வெறி கொண்டிருந்த மக்களாலும் குரூரமான சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். இதே காலப்பகுதியில் நிறவெறி கொண்ட அமெரிக்க இரகசிய அமைப்பொன்று கறுப்பின மக்களைக் கடத்திச் சென்று கொலை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தது. இவ்வாறான இக்கட்டான காலகட்டத்தில் 1865ஆம் ஆண்டு விடுதலைப் பிரகடனத்தின் 13ஆவது திருத்தம் இறுதியாக நிறைவேற்றப்பட்டபோது, அமெரிக்காவில் அடிமைத்தனம் முழுமையாக ஒழிக்கப்பட்டதுடன், அமெரிக்க உள்நாட்டு யுத்தமும் 1865 ஏப்ரல் 9 அன்று முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பின்னர் லிங்கனின் பார்வை நாட்டை புனரமைப்பதையும் அமெரிக்க மக்களிடம் பாகுபாடின்றிய ஒற்றுமையை உருவாக்குவதையும் நோக்கியே இருந்தது. குறிப்பாகத் தேசத்தின் காயங்களைக் குணப்படுத்துவதற்கும் நீதியான மற்றும் நீடித்த அமைதியை அடைவதற்கும் அவர் கொடுத்த முக்கியத்துவம் நல்லிணக்கத்திற்கான அர்ப்பணிப்பைப் பிரதிபலித்து நின்றது.

அடிமைத்தனத்தை ஒழித்து நல்லிணக்கத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த லிங்கனின் உயிர் ஒரு கொலையாளியின் தோட்டாவால் உள்நாட்டுப் போர் முடிவுற்ற, குறுகிய காலத்திலேயே பறிக்கப்பட்டது

மக்களின் கைகளிலான அதிகாரம் சமத்துவத்திற்கான திறவுகோல் என்பதற்கேற்ப லிங்கன், மக்களால் மக்களுக்காக செய்யப்படும் மக்களின் ஆட்சியே ஜனநாயகம் என ஜனநாயகம் என்ற அரசியல் சித்தாந்தத்தை வரையறைப்படுத்தினார். எனவே, எந்த ஒரு நிற, மத, இன அடிப்படையிலான அரசியல் கருத்துகளையும் முதன்மைப்படுத்தாமல் பொதுவாக மக்கள் என்று கூறியமை லிங்கனை பொதுவான மக்களுக்கான தலைவராகக் காட்டி நிற்கின்றது.

மேலும், அமெரிக்க உள்நாட்டுப் போர் மற்றும் அடிமைத்தனத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததன் மூலம் லிங்கனின் நிர்வாகத் திறமை வெளிப்பட்டதுடன், அரசியலமைப்புச் சட்டத்தைப் பற்றிய அவரது ஆழமான புரிதலும், அனைத்து சமூகத்தின் சமத்துவத்தின் மீதும் அவர் கொண்டிருந்த மனிதாபிமானமும், மக்களுக்கானதாகவே அரசாங்கம் எப்போதும் நிலைத்திருக்க வேண்டும் என்ற அவரது தீராத அவாவும் வெளிப்பட்டது. இதனாலேயே இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்ற அரசியல் தலைவர்களுக்கும், வாக்காளர் மக்களுக்கு மத்தியிலும் லிங்கன் அனைத்து மக்களுக்குமான மாபெரும் தலைவராக, சமத்துவத்தின் சாட்சியாக வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்.



# மயக்கும் பிரியா

ஒரு அடார் லவ் என்ற படத்தின் மூலம் தமிழ் சினிமா ரசிகர்களுக்கும் அறிமுகமானார் பிரியா பிரகாஷ் வாரியர். அந்தப் படத்தில் ஒரு காட்சியில் அவரது கண்ணசைவின் அழகில் சொக்கிப்போன இளைஞர்கள் ஏராளம்.

மலையாள இயக்குநர் ஓமர் லூலு இயக்கிய அந்த திரைப்படம். மிகவும் எதிர்பார்க்கப்பட்டாலும் மிகப்பெரிய தோல்விகளை சந்தித்தது.

ஆனாலும், நாளுக்கு நாள் பிரியா வாரியருக்கு ரசிகர்கள் கூடிக் கொண்டே சென்றார்கள். இதற்குக் காரணம் சமூகவலைத்தளமான இன்ஸ்டாகிராமில் அவர் வெளியிடும் அழகான கவர்ச்சியும் தூக்கலான புகைப்படங்கள்தான்.

இந்நிலையில், சமூக வளைத்தளங்களில் அவர் பகிர்ந்துள்ள போட்டோஷூட் புகைப்படங்கள் வைரலாகி வருகின்றன.



# கறுப்பு வெள்ளையில் ரிலீஸ்

கடந்த சில ஆண்டுகளாக வித்தியாசமான கதைக்களன்களை தேடி நடித்து வருகிறார் மம்மூட்டி. அவர் நடிப்பில் சமீபத்தில் வெளியான புழு, கண்ணூர் ஸ்குவாட் மற்றும் காதல் ஆகிய திரைப்படங்கள் விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் பாராட்டுகளைப் பெற்றன.

இந்நிலையில், மம்முட்ஏ நைட் வாட்ச் புரொடக்ஷன் சார்பில் சசிகாந்த் தயாரிக்கும் பிரம்மயுகம் என்ற படத்தில் நடித்து வருகிறார். பேய் திரில்லர் வகைப் படமாக இந்த படம் உருவாகி வருகிறது. இந்தப் படத்தை பூதகாலம் படத்தை இயக்கிய ராகுல் சதாசிவன் இயக்கியுள்ளார்.

மேலும், இம்மாதம் 15ஆம் திகதி வெளியாகும் இந்தப் படம் முழுக்க முழுக்க கறுப்பு வெள்ளையில் ரிலீஸாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

த்ரில்லர் படமாக உருவாகியுள்ள பிரம்மயுகம் திரைப்படத்தின் மீதான எதிர்பார்ப்பை இந்த அறிவிப்பு எகிறவைத்துள்ளது.



# எனக்கும் அந்த ஆசை

சினிமாவில் பிரபலமான பிறகு, அந்த பெயரையும் புகழையும் பயன்படுத்தி அரசியலுக்குள் பிரபலங்கள் நுழைவது புதிது கிடையாது. எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, விஜயகாந்த், சரத்குமார் என இப்படி ஏராளமான பிரபலங்கள் அரசியலிலும் சாதித்துள்ளனர்.

அந்த வரிசையில் நடிகர் விஜயும் கடந்த 2ஆம் திகதி, ‘தமிழக வெற்றி கழகம்’ எனத் தனது கட்சியை அறிவித்து அரசியல் பாதையில் நடை போடுகிறார். விரைவில் முழுநேர அரசியலுக்கும் வர இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, நடிகர் விஷாலும் இயற்கை முடிவு செய்தால் நிச்சயம் அரசியலுக்கு வருவேன் என அவருடைய அரசியல் ஆசையை கோடிட்டு காட்டியிருக்கிறார். இந்நிலையில், நடிகை வாணி போஜனும் இந்த பட்டியலில் இணைந்துள்ளார் என ரசிகர்கள் கமெண்ட் செய்து வருகின்றனர்.

நகைக் கடை திறப்பு விழா ஒன்றில் நடிகை வாணி போஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அவரிடம் அரசியல் ஆசை இருக்கிறதா என்று செய்தியாளர்கள் கேள்வியெழுப்பியபோது, “ஒரு பிரபல அரசியல் தலைவரின் வாழ்க்கையை நாங்கள் வெப் சீரிஸாக எடுத்தோம். அதில் நான் நடித்த போது எனக்கு அரசியல் ஆசை இருந்தது. இப்பொழுதும் இருக்கிறது. ஆனால், விரைவில் அரசியலுக்கு வருவேனா என்பது குறித்து தெரியவில்லை” என தெரிவித்துள்ளார்.



# நோ கட், நோ ம்யூட்


‘அட்டக்கத்தி’ திரைப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமான பா.ரஞ்சித், மெட்ராஸ், கபாலி, காலா ஆகிய படங்களை இயக்கும் வாய்ப்பை பெற்றார். இந்த நிலையில், நீலம் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்கிய பா.ரஞ்சித், பரியேறும் பெருமாள் மற்றும் ‘குண்டு’, ‘ரைட்டர்’ ஆகிய திரைப்படங்கள் விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் வெற்றியைப் பெற்றன.

நீலம் புரொடக்ஷன் அடுத்து தயாரிக்கும் படமாக ‘ஜே பேபி’ திரைப்படம் உருவாகி வருகிறது. இந்த படத்தில் ஊர்வசி, அட்டகத்தி தினேஷ் மற்றும் லொள்ளு சபா மாறன் ஆகியோர் முக்கிய வேடத்தில் நடித்துள்ளனர்.

இந்த படத்தின் டீசர் வெளியாகி கவனம் ஈர்த்த நிலையில், இப்போது படத்தின் சென்சார் தகவல் வெளியாகியுள்ளது.

படத்துக்கு அனைவரும் பார்க்கும் யு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமில்லாமல், படத்தின் காட்களை கட் செய்வோ அல்லது வசனத்தை ம்யூட் செய்யவோ சென்சார் போர்ட் பரிந்துரைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.





# மாறுகிறார் புன்னைகை அரசி

புன்னைகை அரசியாக வலம் வந்து கொண்டிருந்த சினேகா, கடந்த 2012ஆம் ஆண்டு நடிகர் பிரசன்னாவைக் காதல் திருமணம் செய்துகொண்டார். இந்த தம்பதிகளுக்கு கடந்த 2015ஆம் ஆண்டு விஹான் என்ற ஆண் குழந்தை பிறந்தது. அதன் பின்னர் மீண்டும் சினிமாவில் நடிக்க ஆரம்பித்தார். கடைசியாக பட்டாஸ் திரைப்படத்தில் நடித்தார்.

இந்நிலையில், 2020ஆம் ஜனவரி 24ஆம் திகதி சினேகாவுக்கு இரண்டாவதாக குழந்தை பிறந்தது. இதையடுத்து, சினிமாவில் இருந்து சில ஆண்டுகள் ஒதுங்கியிருந்த விஜய்யின் கோட் திரைப்படத்தில் நடித்து வருகிறார்.

இதற்கமைய, சினேகா தொழிலதிபராக காலடி எடுத்து வைக்கவுள்ளார். சினேகாலயா சில்க்ஸ் என்ற பட்டுப்புடவைகளுக்கான கடையை சென்னை தி நகரில் அவர் விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# “எங்களுக்கு தெரியாது”

**ஹஸ்பர் ஏ ஹலீம்**

காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காரணமாக பல இன்னல்களை மக்கள் எதிர் நோக்கி வருகின்றனர். இது தொடர்ந்தும் இருந்தே வருகிறது. யானை-மனிதன் முரண்பாடு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக காணப்பட்டாலும், யானை தாக்குதலினால் பல மனித உயிர்கள் பலியாகின்றன.

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலக பகுதியில் உள்ள ஆயிலியடி, வட்டமடு, செம்பி மோட்டை பகுதியானது விவசாயப் பூமியாகும் இப்பகுதியில், 67 வயதான விவசாயி ஒருவர் 2024.01.21 அன்று மாலை காட்டு யானையின் தாக்குதலால் உயிரிழந்தார்.

இப்படிமாக யானை தாக்குதல் காரணமாக மனித உயிர்கள் பலியாகின்றன.



இப்பகுதியில் முறையான யானை வேலி அமைக்கப்படாமையும் விவசாயிகள் பல துன்பங்களை அனுபவித்து வருவதாக கூறுகின்றனர்.

வனஜீவராசிகள் திணைக்களம் ஊடான கண்காணிப்பில் உள்ள யானை வேலிகள் முறையானதாக அமைக்கப்படுவதில்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். தங்களது வயல் நிலங்கள், பயிரினங்களை பாதுகாப்பதற்காக விவசாயிகள் இரவு நேரங்களில் பாதுகாப்புக்காக பல அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

சில வேளைகளில், யானையின் அட்டகாசத்தால் பல பயன் தரும் மரங்கள், நெற்செய்கை போன்றன அழிக்கப்பட்டு துவம்சம் செய்யப்படுகின்றன.



குறித்த ஆயிலியடி பகுதியில் மாத்திரம், 2015 தொடக்கம் 2024 தற்போது வரை 03 உயிர்கள் யானையின் தாக்குதலினால் காவு கொள்ளப்பட்டுள்ளன. இப்பகுதி மக்கள் விவசாயத்தை நம்பியே வாழ்கிறார்கள் நெற் செய்கை பண்ணப்படும் போதும் அதனைப் பராமரித்து அறுவடை செய்யும் வரை அச்ச சூழ் நிலையில் யானைகளுக்குப் பயந்து காலத்தை வயல் நிலங்களில் இரவு வேலைகளில் கழித்து வருகின்றனர்.

யானை வேலிகளைப் பராமரிக்கவும் பாதுகாப்பற்ற பகுதிகளுக்குச் சீறான தரமான யானை வேலிகளை அமைக்கவும் உரிய அரசாங்க திணைக்களங்கள் முன்வர வேண்டும் இதற்காகப் பொறுப்புடன் அவர்கள் செயற்பட வேண்டும் என்பதுடன், மக்கள் நலனில் அக்கறை உள்ளவர்களாகக் காட்டு யானைகளின் தொல்லைகளில் இருந்து பாதுகாக்கச் சிறப்புப் பயிற்சி திட்டங்களையும் முறையான வேலைத் திட்டங்களையும் ஆரம்பிக்க வேண்டும்.

காட்டு யானைகள் பல இடங்களில் குப்பை மேடுகளைத் தேடி வருவதும் பனை மரங்கள் உள்ள பகுதிகளைத் தேடி வருவதாகவும் கூறப்படுகிறது. இருந்த போதிலும் யானை- மனிதன் மோதல் என்ற நிலை காணப்பட்டாலும் பல யானைகள் பல காரணங்களால் உயிரிழக்கின்றன.

மின்சார வேலியில் சிக்குதல், பட்டாசு வெடி வெடித்து உயிரிழத்தல் போன்ற காரணங்கள் உட்பட இயற்கையாகவும் உயிரிழப்புக்களும் இடம் பெறுகின்றன. வனஜீவராசிகள் திணைக்களத்தின் அறிக்கையின் படி 2022இல் 439 யானைகள் உயிரிழந்துள்ளன என்றும் 2023 ஜனவரி தொடக்கம் டிசெம்பர் 01 வரை 449 யானைகள் உயிரிழந்துள்ளதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான நிலையில், யானை தாக்குதல் தொடர்பாக ஆயிலியடி பகுதியின் இளைஞன் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

“யானை தாக்கம் இங்கு அதிகரித்து உயிர் சேதங்களும் நிலவி வருகின்றது. பரம்பரை பரம்பரையாக நாங்கள் விவசாயமே செய்து வருகின்றோம். யானை வேலி இருக்கின்றபோதும், சீறாக இல்லை. யானை தாக்குதல் காரணமாக வருடாந்தம் பல உயிர் சேதங்கள் ஏற்படுகின்றன. விவசாயத்தைத் தவிர எங்களுக்கு வேறு தொழில் தெரியாது, அரசாங்கம் மூலமான தீர்வு இல்லை, உயிர்ச் சேதம் இடம்பெற்றே வருகிறது. யானை வேலிகளைப் பராமரித்துத் தருமாறு உரிய அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்கின்றோம்” என்றார்.

இப்படியாக யானை தாக்குதல் காரணமாக உயிரைப் பணயம் வைத்து விவசாய நிலத்தைப் பாதுகாக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு அப்பாவி விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆயிலியடி கிராம மக்கள் அன்றாட ஜீவனோபாயமாக விவசாயம் கூலித் தொழில் மூலமாக வாழ்வாதாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

“விவசாயம் செய்து வருகிறோம் யானை வேலி சீரில்லை இதனைச் சீராக்கிச் செய்து தாருங்கள் இதனை யாரும் தேடுவாரற்ற நிலையில் உள்ளது இதனை முறையாகச் சீறாகப் பாதுகாத்து யானை தாக்குதலில் இருந்து பாதுகாத்துத் தாருங்கள்” என இப் பகுதியின் விவசாயி ஒருவர் தனது ஆதங்கத்தைத் தெரிவித்தார்.

மனித -யானை மோதல் என்பது பல காலமாக இடம் பெறுவதுண்டு திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் பல இடங்கள் விவசாய செய்கை கொண்ட இயற்கை எழில் கொண்ட இடமாகவும் பல இயற்கை வளங்களைக் கொண்ட பூமியாகக் காணப்படுகிறது. திருகோணமலையின்- கன்னியா குப்பை மேட்டுப் பகுதி,தம்பலகாமம் ஜெயபுர குப்பை மேட்டுப் பகுதி, கிண்ணியா சின்னத்தோட்டம் குப்பை மேட்டுப் பகுதிகளை உள்ளடக்கிய பகுதிகளில் யானைகள் அதிகமாக நடமாடுகின்றன. உள்ளூராட்சி மன்றங்கள் மூலமாகக் கொட்டப்படும் கழிவுகளைத் தேடி யானைகள் படை எடுக்கின்றன. அருகாமையில் உள்ள மக்கள் இக் காட்டு யானையினால் அச்ச சூழ் நிலையில் தான் வாழ்ந்து வருகின்றார்கள்.

மக்களைப் பாதுகாக்கக் குப்பை மேட்டுக் கழிவுகளை முறையாக முகாமைத்துவம் செய்யக் கூடிய மீள் சுழற்சி மூலமாக உற்பத்திகளை அதிகரிக்கப் பல திட்டங்கள் உள்ள போதிலும் முறையான திட்டம் ஊடாக நடை முறைப்படுத்துவதாகத் தெரியவில்லை.

சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் சூழல் மாசடையாத வண்ணம் கழிவுகளை முகாமை செய்ய வேண்டும் சில வேலைகளில் கழிவுகள் மூலமாக சூழல் மாசடைவு ஏற்பட்டு மக்களைப் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது.

எனவே, தான் யானை தாக்குதலைக் குறைக்கவும் முறையான யானை வேலிகளை அமைக்கவும் உரியவர்கள் முன்வர வேண்டும் என்பதே மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாகும்.



# ‘மலையக காந்தி’



**மெய்யன்**

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னோடியான இலங்கை - இந்திய காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவரும், புசல்லாவை, சரஸ்வதி மத்தியக் கல்லூரியின் ஸ்தாபகருமான - ‘மலையக காந்தி என விளிக்கப்படும் அமரர். கே.இராஜலிங்கம் ஐயாவின் 61ஆவது சிரார்த்த தினம் ஞாயிற்றுக்கிழமை (11) அனுஷ்டிக்கப்பட்டது.

புசல்லாவை, சங்குவாரி தோட்டத்தில், அன்னாரின் சமாதி அமைந்துள்ள வளாகத்தில் மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெற்றது.

மலையகத்திலுள்ள சிரேஷ்ட தொழிற்சங்கவாதியான எஸ்.வீரப்பன் மற்றும் மலையக மக்கள் சக்தி அமைப்பின் தலைவர் இராமன் செந்தூரன் கலந்துக்கொண்டார். சரஸ்வதி தேசிய பாடசாலை அதிபர் இராஜாலிங்கம் ஐயாவின் குடும்பத்தார், மலையக மக்கள் சக்தியின் தலைவர் செந்தூரன் உட்பட சமூக செயற்பாட்டாளர்கள் பலரும் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

மலையக மக்களுக்குக் கல்விக்கண் திறப்பதற்காகவும், தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் சொத்துகளையெல்லாம் விற்று, கிடைத்த அரச சேவையையும் துறந்து திருமணம்கூட முடிக்காமல் மரணிக்கும் வரையும் மக்களுக்காகவே வாழ்ந்தவர்தான் மலையக காந்தியென போற்றப்படும் கே. இராஜலிங்கம்.

இன்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸாகவும் அன்று இலங்கை, இந்தியக் காங்கிரஸாகவும் இருந்த அமைப்பின் ஸதாபகத் தலைவர்களில் ஒருவர் இவர். அவ்வமைப்பின் தலைமைப்பதவியையும் அலங்கரித்தவர்.

பாராளுமன்ற உறுப்பினராகவும் செயற்பட்டவர். புசல்லாவை - சரஸ்வதி மத்தியக் கல்லூரியின் ஸ்தாபகர். பிறப்பும் கல்வியும் காளிமுத்து கங்காணிக்கும், காளியம்மாலுக்கும் பிறந்த ஆறு குழந்தைகளில் மூத்தவர்தான் நாயகன் கே. ராஜலிங்கம். 1909 ஆம் ஆண்டு டிசெம்பர் 3ஆம் திகதி பிறந்த அவர், சிறுவயது முதலே கல்வி மீதும், சமூகம் மீதும் அதிகப் பற்று வைத்திருந்தார். தனது தந்தை பெரிய கங்காணியென்பதால் ஆரம்பக் கல்வியை கம்பளை, அன்றூஸ் கல்லூரியில் பயின்றார்.

உயர்கல்வியை கண்டி, புனித அந்தனீஸ் கல்லூரியில் கற்றார். கல்வியில் சிறந்து விளங்கிய இவர், தமிழ், ஆங்கிலமென இரண்டு மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார். சர்வதேச பரீட்சைகளிலும் சித்தியடைந்தார். இதனால், தமது பாடசாலைக்கே இவரை ஆசிரியராக நியமித்தது பாடசாலை நிர்வாகம். சரஸ்வதி பாடசாலை உதயம் - 1932 தொழிலுக்கு இவர் பாடசாலை செல்லும்போது, தோட்டப்பகுதியிலுள்ள பிள்ளைகள், தேயிலை மலைகளுக்கோரம் காலை முதல் மாலைவரை இருப்பதை கண்டுள்ளார். ஏன் எமது மக்கள் இவ்வாறு ஒதுக்கப்படுகின்றனர், ஓரங்கட்டப்படுகின்றனர் என சிந்தித்த அவர், தோட்டப்பகுதி பிள்ளைகளுக்கு கல்வி அமுதூட்டும் முடிவுக்கு வந்தார்.

இதனால், ஆசிரியர் பதவியை துறந்து, சங்குவாரி தோட்டத்தில் கூடாரம் அமைத்து, பாடசாலை அமைத்தார். தோட்டங்களுக்கு சென்று கல்வி விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தினார். இதற்காக தனது தந்தையிடமும், சகோதரர்களிடமுமே பணம் பெற்றார். ஏனைய தோட்டப்பகுதிகளில் உள்ளவர்களும் பயிலவேண்டும் என்ற நோக்கில் புசல்லாவை சரஸ்வதி வித்தியாலயத்தை 1932இல் ஆரம்பித்தார்.

> **“காந்தியின் காங்கிரஸ் கொள்கைகளையும், அணுகுமுறைகளையும் இலங்கையில் அமுல்படுத்தியதால் மலையக காந்தியென போற்றிப்புகழப்பட்டார்**

தனது தந்தைக்கு சொந்தமான தேயிலை தோட்டமொன்றை விற்பனை செய்தே பாடசாலை நிறுவினார். (கம்பளையிலிருந்து, புசல்லாவை செல்லும் வழியில், அட்டபாகை எனும் நகரம் தாண்டியதும் உள்ள பாஸ்ரோக் தோட்டமே விற்கப்பட்டது). அதன்பின்னர், ஆசிரியர்களுக்கான சம்பளம் உள்ளிட்ட சேவைகளுக்காக வீட்டிலிருந்து தங்க ஆபரணங்களை விற்பனை செய்தார். குடும்ப உறுப்பினர்கள் ஆரம்பத்தில் எதிர்த்துள்ளனர். எனினும், மக்களுக்காக அனைத்தையும் அவர் செய்தார். இதனால், அவரது தந்தையும், சகோதரர்களும் பொருளாதார மட்டத்தில் கீழிறங்கினர்.

இவரால் ஆரம்பிக்கப்பட்ட சரஸ்வதி வித்தியாலயம், இன்று ஒரு தேசிய பாடசாலையாக சிறந்து விளங்குகின்றது. தோட்டப்பகுதிகளிலுள்ள ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயில்கின்றனர். சமூக மாற்றத்துக்கு கல்விபுரட்சியே சிறந்த வழி. அதை அன்றே உணர்ந்தவர்தான் கே.இராஜலிங்கம். இலங்கை, இந்திய காங்கிரஸ் உதயம் - 1939 இலங்கை, இந்திய காங்கிரஸ் 1939ஆம் ஆண்டு உதயமானது. மகாத்மா காந்தியின் சிறப்பு பிரதிநிதியாக நேரு கொழும்பு வந்திருந்தார்.

அவரின் மத்தியஸ்தத்துடனேயே அவ்வமைப்பு உதயமானது. அதன் ஸ்தாபக தலைவர்களில் ஒருவராகவும், பொதுச்செயலாளராக இராஜலிங்கமே நியமிக்கப்பட்டார். காந்தி, நேரு ஆகியோர் இலங்கை வந்தபோதெல்லாம் அவர்களை சந்தித்து பெரும் வரவேற்பை பெற்றிருந்ததால், இவர்களின் ஆசியுடனேயே பொதுச்செயலாளர் பதவி அவருக்கு வழங்கப்பட்டது.

தனது பேச்சை உரைபெயர்ப்பதற்கு இராஜலிங்கத்தையே நேரு அழைப்பார். 1940ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7ஆம் திகதி இலங்கை, இந்திய காங்கிரஸின் முதலாவது மாநாடு கம்பளையில் நடைபெற்றது. தொண்டமானுடன் இணைந்து இவரே மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தார். 47 முதல் 50 வரை இ.தொ.காவின் தலைவராகவும் பதவிவகித்தார்.

அன்று சந்தாப்பணம் இருக்கவில்லை. இதனால், சொந்த பணத்தை பயன்படுத்தியே இவர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டார். ஜெனிவா மாநாடு உட்பட பல இடங்களுக்கு சொந்த பணத்திலேயே தொழிலாளர்களுக்காக







சென்றுள்ளார். சௌமியமூர்த்தியின் நம்பிக்கைக்குரிய பாத்திரமாக திகழ்ந்தவர். ஏன், தளபதி என்றுகூட சொல்லாம். அஸீஸ், வெள்ளையன், வேலுப்பிள்ளை என முக்கிய தலைவர்கள் கட்சிலிருந்து வெளியேறும்போது, தொண்டமானுக்கு பக்கபலமாக இவரே கைகொடுத்தார். 42இல் அஸீஸ் காங்கிரஸை கைப்பற்றியபோது, தொண்டமான் பக்கம் நின்று குரல்கொடுத்தார். இப்படி இன்றுள்ள இ.தொ.காவின் வளர்ச்சியில் இவருக்கு பெரும் பங்குண்டு.

தொழிலாளர்களுக்காக அவர் பல இடங்களுக்கு செல்வதால், தந்தையால் காரொன்று வாங்கிக்கொடுக்கப்பட்டுள்ளது.

நாவலப்பட்டிய, லட்சுமி தோட்டத்தில் நடைபெற்ற போராட்டத்துக்கு சென்றிருந்த அவர், அங்கு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சாப்பிடாமல் இருப்பதை அறிந்தார். உடனே காரை விற்றார். கிடைத்த பணத்தில் தொழிலாளர்களுக்கு வழங்கிவிட்டு, பாதி தூரம் கால்நடையாகவும், மீதி தூரம் பஸ்ஸிலூமாக வீடுவந்து சேர்ந்தார். தொழிலாளர்களின் பல போராட்டங்களில் பங்கேற்றுள்ளார்.

1947ஆம் ஆண்டு நாவலப்பிட்டி தேர்தல் தொகுதி ஊடாக பாராளுமன்றத்துக்கு தெரிவான அவர், எந்தவொரு சலுகையையும் பெற்றதில்லை. திருமண வாழ்வில் இணைந்தால் குடும்பத்தை சுமக்கவேண்டிவரும் என்பதால் அதை நிராகரித்தவர். இப்படி மக்களுக்காகவே வாழ்ந்த அவர், 1963ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி எம்மைவிட்டு பிரிந்தார்.

காந்தியின் காங்கிரஸ் கொள்கைகளையும், அணுகுமுறைகளையும் இலங்கையில் அமுல்படுத்தியதால் மலையக காந்தியென போற்றிப்புகழப்பட்டார். அவரின் சமாதி சங்குவாரி தோட்டத்தில், நுவரெலியா பிரதான வீதிக்கு மேழுள்ளது. வீதி அபிவிருத்தியின்போது அதை உடைப்பதற்கு முயற்சிக்கப்பட்டாலும் பின்னர் அது கைவிடப்பட்டது.

சின்னையா, தங்கவேல், ராஜரட்னம், தவமணியம்மாள், ராஜமணியம்மாள் ஆகியோர் என்.இராஜலிங்கத்தின் சகோதர, சகோதரிகளாவர். இதில் தவமணியம்மாள் என்பவரே இவரின் அனைத்து தகவல்களையும் ஆவணவப்படுத்தி வைத்துள்ளார். அதை தற்போது சீ.இராஜலிங்கம் என்பவர் பராமரித்து வருகிறார்.

மியன்மார்

# கட்டாய இராணுவ சேவை சட்டம்



மியன்மார் நாட்டில் இராணுவ ஆட்சி நடந்து வருகிறது. கடந்த 2021 பெப்ரவரி அன்று ஜனநாயக அரசை கவிழ்த்து விட்டு ஆட்சியை இராணுவம் கைப்பற்றியது. இராணுவ ஆட்சிக்கு எதிராக போராளி குழுக்கள் சண்டையிட்டு வருகிறார்கள். இதில் சில பகுதிகளை போராளி குழுக்கள் கைப்பற்றியது. மேலும் தாக்குதலில் வீரர்களும் உயிரிழந்தனர்.

போராளி குழுக்களுடன் மோதலில் மியன்மார் இராணுவம் பின்னடைவை சந்தித்து வருகிறது.

இந்நிலையில், மியன்மாரில் முதன்முறையாக இராணுவ சேவை சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இது உடனடியாக அமுலுக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இளைஞர்கள், பெண்கள் குறைந்த பட்சம் 2 ஆண்டுகள் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்ற வேண்டும். முந்தைய இராணுவ அரசாங்கத்தின் கீழ், நிறைவேற்றப்பட்ட 2010 மக்கள் இராணுவ சேவைச் சட்டத்தின் கீழ், 18 முதல் 45 வயதுக்குட்பட்ட ஆண்களும், 18 முதல் 35 வயதுக்குட்பட்ட பெண்களும் இரண்டு ஆண்டுகளுக்கு ஆயுதப் படைகளில் சேர்க்கப்படலாம். தேசிய அவசரக் காலங்களில் ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படலாம்.

இதுகுறித்து இராணுவ செய்தித் தொடர்பாளர், "மியன்மாரின் தற்போதைய சூழ்நிலை காரணமாக இந்த சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. சட்டத்தைச் செயல்படுத்துவது எதிரிகளுக்கு வலிமையைக் காட்டுவதன் மூலம் போரைத் தடுக்க உதவும்.

தேசப் பாதுகாப்பு என்பது சிப்பாயின் பொறுப்பு மட்டுமல்ல. இது நாட்டிலுள்ள அனைத்து மக்களின் பொறுப்பாகும். அதனால் மக்கள் இராணுவ சேவை சட்டத்தின் கீழ் அனைவரும் பெருமையுடன் பணியாற்ற வேண்டும் என்று கூற விரும்புகிறேன்" என தெரிவித்துள்ளார்.

மடகாஸ்கர்

**பாலியல் வன்கொடுமை செய்யும்**

# குற்றவாளிகளுக்கு ஆண்மை நீக்கம்

மடகாஸ்கர் நாட்டில் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. கடந்த ஆண்டு 600 சிறுமிகள்/குழந்தைகள் பாலியல் வன்கொடுமை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் கடந்த ஜனவரி மாதம் மட்டும் 133 சிறுமிகள்/குழந்தைகள் பாலியல் வன்கொடுமை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை குற்றங்கள் அதிகரித்துவருவதால் குற்றங்களை தடுக்கவும், குற்றவாளிகளுக்கு தண்டனையை அதிகரிக்கவும் மடகாஸ்கர் அரசு அதிரடி முடிவெடுத்துள்ளது.

அதன்படி, குழந்தைகளுக்கு எதிராக பாலியல் வன்கொடுமை குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு ஆண்மை நீக்கம் செய்ய மடகாஸ்கர் அரசு சட்டம் கொண்டுவந்துள்ளது.

குற்றவாளிகளுக்கு இரசாயன ரீதியிலும், அறுவை சிகிச்சை மூலமாகவும் ஆண்மை நீக்கம் செய்ய வகை செய்யும் வகையில் கொண்டுவரப்பட்டுள்ள சட்டம் சனிக்கிழமை (11) மடகாஸ்கர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள சட்டம் அந்நாட்டின் உயர் அரசியலமைப்பு நீதிமன்றத்தின் அங்கீகாரத்தை பெற்று பின்னர் ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட உள்ளது. ஜனாதிபதி ஒப்புதல் அளித்தவுடன் சட்டம் அமலுக்கு வரவுள்ளது. இந்த சட்டத்தின்படி, 10 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை பாலியல் வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் குற்றவாளிக்கு அறுவை சிகிச்சை மூலம் ஆண்மை நீக்கப்படும் வகையில் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இஸ்ரேல்

# "ஐ.நா. தலைமையகத்திற்கு அடியில் சுரங்கப்பாதைகள்"

கடந்த 2023 ஒக்டோபர் 7 அன்று தொடங்கிய இஸ்ரேல்-ஹமாஸ் போர் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது.

இந்நிலையில், காசாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பலஸ்தீன அகதிகளுக்கான தலைமையக அலுவலகத்திற்கு கீழே சுரங்கப்பாதைகள் உள்ளதை கண்டுபிடித்திருப்பதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இஸ்ரேல் இராணுவம். "இந்த சுரங்கப்பாதைகள் ஹமாஸ் அமைப்பினர்களால் பயன்படுத்தப்பட்டு உள்ளது. இதற்கான மின்சார விநியோகம் ஐ.நா. அமைப்பின் தலைமையகத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது" என தெரிவித்துள்ளது.


ஐ.நா.வின் அகதிகளுக்கான அமைப்பு, ஹமாஸ் அமைப்பினருக்கு மறைமுகமாக உதவி வருவதாக முன்னரே இஸ்ரேல் தெரிவித்திருந்தது. இப்பின்னணியில் இந்த சுரங்கப்பாதை கண்டுபிடிப்பு இஸ்ரேலின் குற்றச்சாட்டுகளுக்கு வலு சேர்க்கிறது.

ஆனால், சுரங்கப்பாதைகளில் ஹமாஸ் அமைப்பினர் இருப்பதற்கான உறுதியான ஆதாரம் எதுவும் தற்போது வரை முன்வைக்கப்படவில்லை.

இந்த சுரங்கபாதை அரை கிலோ மீட்டர் தூர நீளத்துக்கு உள்ளது என்றும் இதில் ஆங்காங்கே 10 கதவுகள் இருந்து உள்ளன என இதனை பார்வையிட்ட பத்திரிகையாளர்களிடம் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

புனே

# சூறாவளி போல் சுழன்ற கொசுக்கள்



சூறாவளி காற்றின் போது திடீரென காற்று பூமியில் உள்ள மண்ணை எடுத்துக் கொண்டு அப்படியே சுழன்று அடிக்கும். அப்போது கையிறு திரித்தல் போன்று வான் அளவிற்கு அப்படியே செல்லும். அதேபோல் கடலில் சுறாவளி ஏற்பட்டாலும், திடீரென காற்று கடல் நீரை அவ்வாறு எடுத்துச் செல்லும். இது சூறாவளியின் போது நடப்பது சகஜம். ஆனால்,

மகாராஷ்டிரா மாநிலம் புனேவில் உள்ள கேஷவ்நகர் மற்றும் காரடி பகுதிகளில் திடீரென கொசுக்கள் இவ்வாறு சூறாவளி போன்று சுழன்று சென்றது அங்குள்ள மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வளவு கொசுக்கள் மக்கள் வாழும் இடத்திற்குள் நுழைந்தால் என்ன ஆவது? என கேள்வி எழுப்பியதோடு, சுகாதாரம் குறித்து கவலை அடைந்தனர். மேலும், புனே நிர்வாகம் உடனடியாக கொசுக்களை கட்டுப்படும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

புதுடெல்லி

# மரண தண்டனை விதிக்கப்பட்ட இந்தியர்கள் விடுதலை

கத்தார் நாட்டை உளவு பார்த்ததாக இந்தியாவை சேர்ந்த முன்னாள் கடற்படை வீரர்கள் 8 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இதையடுத்து, அவர்கள் கைது செய்யப்பட்டு தடுப்பு காவலில் வைக்கப்பட்டனர்.

அவர்களுக்கு கடந்த ஒக்டோபர் மாதம் கத்தார் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பு கூறியது.

பின்னர், இந்தியா சார்பில் சட்ட பூர்வமாக எடுத்த நடவடிக்கையினால் இந்த மரண தண்டனை குறைக்கப்பட்டது.

ஆனாலும் தொடர்ந்து, அவர்களை விடுவிப்பதற்காக இந்திய வெளியுறவு துறை சார்பில் கத்தார் நாட்டுடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.

இதன் பலனாக கைது செய்யப்பட்ட 8 பேரையும் 18 மாதங்களுக்கு பிறகு கத்தார் அரசு விடுதலை செய்துள்ளது.

புது டெல்லி

# ஒரு மாதத்திற்கு 144 தடை உத்தரவு



'டெல்லி நோக்கி பேரணி' என்ற பெயரில் சம்யுக்தா கிசான் மோர்ச்சா, கிசான் மஸ்தூர் மோர்ச்சா உட்பட 200 விவசாய அமைப்புகளைச் சேர்ந்த விவசாயிகள் செவ்வாய்க்கிழமை (13) புதுடெல்லி நோக்கி பேரணியாகச் செல்ல திட்டமிட்டுள்ளனர்.

இதற்காக, உத்தரப்பிரதேசம், சண்டிகர், பஞ்சாப்பை சேர்ந்த விவசாயிகள், 2 ஆயிரம் முதல் 2,500 டிராக்டர்களில் புது டெல்லி-நொய்டா எல்லையில் திரண்டு போராட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

பயிர்களுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்டப்பூர்வ உத்தரவாதம் வழங்குவது, ஓய்வூதியம் உள்ளிட்ட 10 கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த பேரணி நடத்தப்படுகிறது.

விவசாயிகளின் பேரணியைத் தடுக்க புதுடெல்லி எல்லையில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. அவர்களைப் புதுடெல்லி எல்லையிலேயே தடுத்து நிறுத்த பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.

இதேபோன்று, கான்கிரீட் தடுப்புகள், கம்பி வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. தொலைபேசி இணையச் சேவை துண்டிக்கப்பட்டுள்ளது. பஞ்சாப் எல்லை சீல் வைக்கப்பட்டுள்ளது. டெல்லி-காசிப்பூர் பகுதியில் தடுப்புகள் அமைக்கப்பட்டு உள்ளன. இந்நிலையில், டெல்லி முழுவதும் திங்கட்கிழமை (12) முதல் மார்ச் 12ஆம் திகதி வரை ஒரு மாதத்திற்கு 144 தடை உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.



**ஆப்கானிஸ்தானுக்கெதிரான**

# தொடரைக் கைப்பற்றிய இலங்கை

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை இலங்கை கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் வென்றிருந்த இலங்கை, பல்லேகலவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 308/6 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: சரித் அசலங்க ஆ.இ 97 (74), குசல் மென்டிஸ் 61 (65), சதீர சமரவிக்கிரம 52 (61), ஜனித் லியனகே 50 (48) ஓட்டங்கள். பந்துவீச்சு: அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் 3/56, பஸல்ஹக் பரூக்கி 1/55, நூர் அஹ்மட் 1/54, கேய்ஸ் அஹ்மட் 1/55)

ஆப்கானிஸ்தான்: 153/10 (33.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: ரஹ்மத் ஷா 63 (69), இப்ராஹிம் ஸட்ரான் 54 (76) ஓட்டங்கள். பந்துவீச்சு: வனிடு ஹசரங்க 4/27, அசித பெர்ணாண்டோ 2/23, டில்ஷான் மதுஷங்க 2/28, பிரமோத் மதுஷன் 1/37)

போட்டியின் நாயகன்: சரித் அசலங்க



**தேசங்களுக்கான ஆபிரிக்கக் கிண்ணத் தொடர்:**

# சம்பியனாகிய ஐவரி கோஸ்ட்

தேசங்களுக்கான ஆபிரிக்கக் கிண்ணத் தொடரில் ஐவரி கோஸ்ட் சம்பியனாகியது.

தம் நாட்டில் நடைபெற்று வந்த இத்தொடரில், நேற்று அதிகாலை நடைபெற்ற இறுதிப் போட்டியில் நைஜீரியாவை எதிர்கொண்ட ஐவரி கோஸ்ட் 2-1 என்ற கோல் கணக்கில் வென்றே சம்பியனாகியது.

ஐவரி கோஸ்ட் சார்பாக பிராங்க் கெஸி, செபஸ்டியன் ஹாலர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, நைஜீரியா சார்பாகப் பெறப்பட்ட கோலை வில்லியம் ட்ரூஸ்ட்-எகொங்க் பெற்றார்.

# சைக்கிள் ஓட்டப் போட்டியில் சாதனை



**றீ.எல்.ஜவ்பர்கான்**

பொத்துவில் அறுகம்பை கடற்கரை தொடக்கம் பாசிக்குடா வரை நடைபெற்ற சைக்கிள் ஓட்டப் போட்டியில் காத்தான்குடி. Ultra-distributors (PVT) LTD அல்ஹாஜ் A.M. உனைஸ் முதலாவது இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். 156 கிலோ மீட்டர் தூரத்தினை நான்கு மணித்தியாலம் நாற்பது நிமிடத்தில் சைக்கிளை ஓட்டி முடித்துள்ளார்.

இப்போட்டி நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நடைபெற்றது. அதேநேரம் 40 வயதுக்கு கீழ் பட்டோருக்கான சைக்கிள் ஓட்டம் போட்டியிலும் இவரே முதலிடம் பெற்றார்.

காத்தான்குடியின் பிரபல வர்த்தகரான இவர் கடும் பயிற்சி எடுத்தே இச்சாதனையை படைத்துள்ளார்.



**ஸ்பானிய லா லிகாத் தொடர்:**

# சமநிலையில் பார்சிலோனா – கிரெனடா போட்டி

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், நடப்புச் சம்பியன்களான பார்சிலோனாவின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 3-3 என்ற கோல் கணக்கில் கிரெனடா சமப்படுத்தியது.

பார்சிலோனா சார்பாக லமினே யமால் இரண்டு கோல்களையும், றொபேர்ட் லெவன்டோஸ்கி ஒரு கோலையும் பெற்றனர். கிரெனடா சார்பாக றிச்சர்ட் சஞ்சேஸ்ம் பகுன்டோ பெல்லிஸ்ரி, இக்னாசி மிகேல் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அத்லெட்டிகோ மட்ரிட்டுடனான போட்டியில் இஸாக் றொமெரோ பெற்ற கோலுடன் 1-0 என்ற கோல் கணக்கில் செவிய்யா வென்றது.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் 61 புள்ளிகளுடன் றியல் மட்ரிட் முதலாமிடத்திலுள்ளது. 56 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஜிரோனாவும், 51 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் பார்சிலோனாவும், 48 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அத்லெட்டிகோ மட்ரிட்டும் உள்ளது.

**இத்தாலிய சீரி ஏ தொடர்:**

# நாப்போலியை வென்ற ஏ.சி மிலன்



இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், ஏ.சி மிலனின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான நாப்போலி தோற்றது.

மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை தியோ ஹெர்ணாண்டஸ் பெற்றார்.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 60 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் இன்டர் மிலன் உள்ளது. 53 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஜுவென்டஸும், 52 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் ஏ.சி மிலனும், 42 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அத்லாண்டாவும் உள்ளன. இதில் ஏ.சி மிலன் ஒரு போட்டி அதிகமாக விளையாடியுள்ளது.

# ஹாக்கியில் ஸ்பெயினை வீழ்த்தியது இந்தியா



சர்வதேச ஹாக்கி சம்மேளத்தின் புரோ ஹாக்கி லீக் தொடரில் நேற்று புவனேஷ்வரில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்தியா - ஸ்பெயின் அணிகள் மோதின. 7ஆவது நிமிடத்தில் இந்திய அணியின் கேப்டன் ஹர்மன்பிரீத் சிங் பெனால்டி கார்னரை கோலாக மாற்றினார்.

தொடர்ந்து 20ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி ஸ்டிரோக்கை ஹர்மன்பிரீத் சிங் கோலாக மாற்றி அசத்த இந்திய அணி 2-0 என முன்னிலை பெற்றது.

24ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி கார்னர் வாய்ப்பை ஜுக்ராஜ் சிங் கோலாக மாற்ற முதல் பாதி ஆட்டத்தில் இந்திய அணி 3-0 என வலுவான முன்னிலையில் இருந்தது.

இதற்கமைய, 34ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் முதல் கோலை அடித்தது. அந்த அணிக்கு கிடைத்த பெனால்டி ஸ்டிரோக்கில் கேப்டன் மிரல்ஸ் மார்க் கோல் அடித்தார்.

50ஆவது நிமிடத்தில் இந்திய அணியின் லலித் குமார் உபாத்யாயா பீல்டு கோல் அடித்து அசத்தினார். முடிவில் இந்திய அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் செவ்வாய்க்கிழமை, 13 பெப்ரவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.